உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27] கீலக - ஆவணி - 10—9—68 [இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினுய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

விண்ணும் மண்ணும்

உலகங்கள் அல்லது அண்டங்கள் பலகோடி, கோடானு கோடி என்று நமது புராணங்களும், சாத்திரங்களும் கூறுகின் றன. இந்நிலவுருண்டையேயன்றி இதற்கு வேருகக் காணப்படுகின்ற ஞாயிறு, திங்கள் செவ்வாய் முதலிய கோள்களும், மற்றும் எண்ணிறந்த விண்மீன்கள் பலவும் தனித்தனிக் கோளங்களாகிய உலகங்களே என இக்காலத்தவரும் கூறுவர். இவையனைத்தும் வானத்தில் காணப்படும் ஒளியுலகங்கள். இனிப் பூமிக்குக் கீழாக இருள் உலகங்கள் உள்ளன என்பது புராணங்களின் துணிபு. எனவே, எல்லா உலகங்களையும்,

'மேல், கீழ், நடு' என மூன்ருகப் பிரித்து, 'மூவுலகம்' என வழங்குவர். இம்மூன்றுலகங்களில் கீழுலகம் தாழ்வுடைய தாகலின், விண்ணுலகமும், மண்ணுலகமும் ஆகிய இரண்டு உலகங்களையே சிறப்புடைய உலகங்களாகக் குறிப்பர். இனி இவ்விரண்டுலகங்களில் ஒளியுலகமாகிய விண்ணுலகம் புண்ணியத்தின் பயனையே நுகர்கின்ற புண்ணியலோகமாய்த் தேவருலகம் எனப்பட்டுச் சிறப்புடையதாகச் சொல்லப்படுகிறது. மண்ணுலகம் ஒளியும், இருளும் இன்பமும். துன்பமும் மாறிமாறி வருவதாய் நல்வினை, தீவினை இரண்டையும் நுகர்ந்து இரண்டையும் ஈட்டுகின்ற மக்களுலகம் எனப்பட்டு, மேற்கூறிய தேவருலகினும் தாழ்ந்தது எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. இக்கூற்று நல்வினை, தீவினைகளின் பயனை நுகரும் உலகியல் பற்றி உளதாயினும், இறைவனது திருவருளைப் பெறும் மெய்ந்நெறி பற்றி நோக்குமிடத்து, விண்ணுலகினும் மண்ணுலகமே சிறப்புடையது எனக் கூறப்படுகின்றது.

இருவினைகளின் நீங்கி இறைவன் திருவடியை அடைய வேண்டுமாயின், விண்ணுலகத்தவராகிய தேவர்களும் மண்ணுலகத்தில் வந்து இறைவனை வழிபட்டே பெறவேண்டும் என்பது அருள்நூல்களின் துணிபு என்பதை, "வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனைஅர்ச் சிப்பர்' என்னும் சிவஞானசித்திப் பகுதி நன்கு உணர்த்துகின்றது. இதற்கேற்ப விண்ணோர் பலர் மண்மேல்வந்து இறைவனை வழிபட்டுப் பல்வகை நலங்கள் பெற்ற தலங்கள் தமிழ் நாட்டிலும், பிற விடங்களிலும் நிறைந்து விளங்கக் காண்கின்றோம்,

'தேவன்' என்றும், 'கடவுள்' என்றும் சொல்லப்படும் பெயர்கள், உண்மையில், இயல்பாகவே பாசம் இலனாகிய முதற் கடவுளுக்கே உரியனவாகும். ஆயினும், இயல்பாகவே பாசங்களுட்பட்ட உயிர்வருக்கத்தினராகிய சிலரும் அவனது தலைமைகளில் ஒவ்வொன்றைப்பெற விழைந்து, அவற்றின் பொருட்டுச் சில புண்ணியங்களைச் செய்து அவற்றைப்பெற்று, 'தேவர்' என்றும் 'கடவுளர்' என்றும் முகமனுக உயர்த்துச் சொல்லப் படுகின்றனர். இதனை ஏனையோரேயன்றி அவர்களே சிற்சில வேளைகளில் மறந்து, தங்களையே முதற்கடவுளராக எண்ணி மயங்கி விடுகின்றனர். அங்ஙனம் மயங்கிய நிலையை எடுத்துக் காட்டுவனவே மாலும், அயனும் அடிமுடி தேடிய வரலாறு,

தேவர் பலரும் துரும்பு ஒன்றை அசைக்கமாட்டாது நின்ற வரலாறு முதலிய வரலாறுகள், இடையறாத இன்ப நுகர்ச்சியிலும், 'தேவர், கடவுளர்' எனக் கூறப்படுகின்ற பெருமையிலும் மயங்கிக்கிடத்தலால் விண்ணுலகத்தவர்க்கு, முழுமுதற் கடவுளாகிய இறைவனை வணங்கி அவன் அருளைப்பெறும் வாய்ப்புப் பெரும்பான்மையும் இல்லாதொழிகின்றது. ஆகவே, எக்காரணத்தாலேனும் அவர்கள் அவ்விண்ணுலகினின்றும்நீங்கி இம்மண்ணுலகில் வருவார்களாயின், அம்மயக்கம் நீங்கி இறைவனை வழிபடும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இதனால், மெய்ந்நெறிபற்றிப் பார்க்குமிடத்து விண்ணுலகினும் மண்ணுலகமே சிறந்துநிற்பதாம். மாணிக்கவாசகர் இதனைப் பல இடங்களில் நன்கு எடுத்து ஓதியருள்கின்றார். "கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி", "தேவர் கனவிலும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்... சிவபெருமான்", 'மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே - நூலே நுழைவரியான்" என்பன முதலாகக் குறிப்பான் அருளிச்செய்தமையேயன்றி,

" புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே "

என இனிது விளங்கவும் அருளிச்செய்தார்.

இறைவன் விண்ணுலகில் எளிதில் தோன்றி அருள் செய்யாது, மண்ணுலகில் எளிதில் தோன்றி அருள் செய்தற்குக் காரணம், செருக்கின்றி அன்புபூண்டு ஒழுகும் அடியார்கள் மண்ணுலகில் மிகுந்திருத்தலேயாகும். அங்ஙனம் அவன் எளிவந்து அருள்செய்த வரலாறுகள் பலவற்றை மாணிக்கவாசகர் தமது கீர்த்தித் திருவகவலில் எடுத்தோதிப் போற்றினார். மற்றும், 'திருவார்த்தை' என்னும் திருப்பதிகத்திலும் அவ்வாறு அருளிச்செய்தார். திருத்தொண்டர் புராணத்திற்கு முதல்நூல் சுந்தரர் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையாதல்போல,

திருவிளையாடற் புராணத்திற்கு முதல்நூல் மாணிக்கவாசர் அருளிய கீர்த்தித் திருவகவலே. எனினும் திருத்தொண்டர் புராணத்திற்கு முதல்நூல் திருதொண்டத்தொகை என்று அப்புராணத்தில் எடுத்துச் சொல்லப்பட்டதுபோலத் திருவிளையாடற் புராணத்திற்கு முதல்நூல் கீர்த்தித் திருவகவல் என்று அப்புராணத்தில் சொல்லப்படவில்லை.

இறைவன் அடியார்க்கெளியனுதலைக் காட்டிய பல திருவிளையாடல்களில் ஈடுபடுகின்ற மாணிக்கவாசகர். மிகுதியாக வேறு இடங்களிலும் எடுத்தோதி இன்புறும் திருவிளையாடல்கள் இரண்டு. அவை, நரி பரியாக்கியதும், மண் சுமந்ததுமாகும். இவற்றுள்ளும் மண்சுமந்த திருவிளையாடலின் அருமையை, "பண்சுமந்த பாடல்" என்ற அம்மானைத் திருப்பாட்டில் பல படியாகப் பாடி மகிழ்கின்ருர். இத்திருவிளைடாடல் யார் பொருட்டுச் செய்யப்பட்டது என்பார்க்கு, 'அடியவள் ஒருத்திக்காக' என்று கீர்த்தித் திருவகவலில் கூறப்பட்டது. அவள் 'வந்தி' என்னும் பெயருடைய பிட்டு விற்பவள் என்பதைத் திருவிளையாடற் புராணத்தால் அறிகிருேம. இவள்பொருட்டுப் பெருமான் மண் சுமந்ததை மிகுதியாகப் பாராட்டியதற்குக் காரணம், மண்சுமந்து மட்டும் போகாமல், பாண்டியனுல் தனது பொன்போன்ற மேனியில் பிரம்படியும் பட்டமையேயாகும். எத்துணையும் அரியோனுகிய இறைவன் எத்துணையும் எளியோனுகியது இதனுல் இனிது விளங்குகின்றதன்ருே !

இறைவன் எத்துணை அரியன் என்பதை, "விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன், கண் சுமந்த நெற்றிக்கடவுள், பொன்மேனி" என்பனவற்ருல் அடிகள் விளக்குகின்ருர். அவற்ருேடு, "பெண்சுமந்த பாகத்தன்" என்பதனுல், 'மாதொரு பாதியாகக்கொண்ட மேனியில் பிரம்படியை ஏற்றல் பொருந்துமோ' என்பதையும் நயம்படக் குறிக்கின்ருர். இன்னும். 'அவன் தன் பொன்மேனியில் பாண்டியனுல் அடியுண்டான்' என்று கூருமல், "அக்கோவால் மொத்துண்டு" என்று, 'மொத்துண்டு' என்ற சொல்லைக் கையாள்கின்ருர். இவையெல்லாம் அவனது கருணைப் பெருக்கை இனிது புலப்படுத்தப் போந்தனவாகும்.

"விண் சுமந்த கீர்த்தி" என்றதனால், 'விண்ணோர்க்கும் மேலானவன்' என்பது குறிக்கப்பட்டது. விண்ணோர்க்கும் மேலான இடமாகக் குறிக்கப்படுவது பரவெளி. இதனை ஔவையார். "மெய் விண்" என்று குறித்துள்ளார்.

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
அனைத்தாய நூலகத்தும் இல்லை — நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லால் கவலைப்படேல் நெஞ்சே! மெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி"

என்பது அப்பாடல். விண்ணவராகிய தேவர்கள் வாழும் விண்ணுலகம் பொய்விண் - அழிகின்ற விண்ணுலகம். இறைவன் இருக்கின்ற பரவெளி மெய்விண் - என்றும் அழிவில்லாத விண்ணுலகம். எனவே அத்தகைய பரவெளியாகிய மெய் விண்ணில் இருப்பவன் தேவருலகிற்கும் கீழே உள்ள மண்ணுலகில் வந்து மண்ணையே சுமந்தான் என்றால் அத்தகைய வாய்ப்பையுடைய மண்ணுலகத்தின் பெருமை அளவிடற்கரிய தன்றோ! இத்திருவிளையாடல் இறைவன் மாணிக்கவாசகர் பொருட்டு நரியைப் பரியாக்கிக்கொணர்ந்த ஆவணிமூலத் திரு நாளோடு தொடர்புபடுத்திக் கொண்டாடப்படுவது.

ஆவணிமூலத் திருநாள் நமது தருமையாதீனத்திற்குச் சிறந்ததொரு விழாநாள் அவ்விழாவில் இறைவனது திருவிளையாடல் பற்றிய சொற்பொழிவும், பிறவும் நடைபெறுவதுடன் தமிழிலும், சைவ சித்தாந்தத்திலும வல்லவர்கட்கு ஸ்ரீல ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் பட்டம் அளித்து ஆசி வழங்கியருள்வார்கள். அண்மையில் நடைபெற்ற இவ்விழாவில் முறையான பலசிறப்புக்களுடன். சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத் துறைத் துணைப்பேராசிரியர் டாக்டர் உயர்திரு வ. ஆ. தேவசேனுபதி எம். ஏ. பிஎச். டி அவர்கட்கு ஸ்ரீல ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 'சித்தாந்த வித்தகர்' என்னும் பட்டம் அளித்து ஆசிர்வதித்தருளியது அன்பர்கள் பலரது கண்ணிற்கும், கருத்திற்கும் அரும்பெரு விருந்தாய் அமைந்தது. இவ் ஆவணிமூல விழாநாளை யொட்டி இறைவனது கருணைப் பெருக்கை நினைந்து, அனைவரும் அக்கருணைக்கு உரியாராகும் வகை ஒழுகிப் பயன் பெறுவார்களாக.

— —

உ

குருபாதம்

குருவருள்

அறநெறியும் அருள்நெறியும்

"பொறிவாயில் ஐந்தவித்தான்"

கடவுளது எங்கும் நிறைந்திருக்கின்ற தன்மையைப் புலப் படுத்தற் பொருட்டு 'இறைவன்' என யாவரும் வழங்கும் பெயரால் குறித்த திருவள்ளுவர், பின்பு அவனைக் குறித்தற்கு ஆக்கி வழங்கிய பெயர், "பொறிவாயில் ஐந்தவித் தான்" என்பது. இதனுள் "பொறி" என்றது, 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என்பவற்றை. இவ்வைந்தையும், 'ஐம்பொறிகள்' என வழங்குதல் யாவரும் அறிந்தது. இனி, "ஐந்து" என்ற எண்ணுப் பெயர் ஆகுபெயராய் ஐந்து ஆசை களைக் குறித்தது. ஆசை என்பது ஒன்றேயாயினும், அதனை "ஐந்து" என்றது, ஆசைக்குக் காரணமாய் உள்ள புலன்கள் ஐந்தாகலின், அப்புலன்கள் ஒவ்வொன்றின்மேலும் ஆசை செல்லுதல் பற்றியாம்.

மேற்குறித்த ஐப்பொறிகட்கும் புலனாகின்ற பொருள்கள் ஐந்து. அவை முறையே. 'ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை' என்பன. இவை 'பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என வடமொழியிற் சொல்லப்படும். இவையே ஐம்புலன்களாம். இவ்வைம்புலன்கள்மேல் ஆசை உண்டாதல், மனம் ஐம்பொறி களின் வழியே சென்று அவைகளைப் பற்றிய பின்பேயாம். ஆகவே. ஐம்புல ஆசைகட்கு வாயிலாக - வழியாக உள்ளவை மேற்கூறிய ஐம்பொறிகளே. அதனால், "பொறி வாயில் ஐந்து" எனக் குறித்தார் திருவள்ளுவர். 'பொறிகளை வழியாக உடைய ஐந்து ஆசை' என்பது அதன் பொருள். ஆசைகளை ஐந்து என்று குறித்த அதனாலே, பொறிகளும் ஐந்து என்பது சொல்லாமலே விளங்கிற்று.

'அவித்தல்' என்பது, 'அடக்குதல்' எனப் பொருள் தரும். இதனை, "செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித் தொழுகல் ஆன்ற பெரியா ரகத்து" (குறள்-694) 'ஆன்றவிந்

தடங்கிய கொள்கைச் சான்ருேர்'' (புறம்) என்பன போன்ற பகுதிகளால் உணரலாம். எனவே, ''ஐந்து அவித்தான்'' என்பது, 'ஐம்புல ஆசைகளை அடக்கினவன்' எனப் பொருள் தருவதாம்.

ஐம்புல ஆசை என்பது மக்களுக்கன்ருே உள்ளது! அதனுல், மக்கள் அன்ருே ஐம்புல ஆசையை அடக்க வேண்டும்? இறைவனுக்கு ஐம்புல ஆசை ஏது? அஃது இல்லாதபொழுது அவனை, 'ஐம்புல ஆசையை அடக்கினவன்' என்பது எப்படிப் பொருந்தும் என்ற ஐயம் உண்டாகலாம்

இறைவனைத் திருவள்ளுவர், 'ஐம்புல ஆசையை அடக்கினவன்' எனக் கூறியதல்லது, 'என்று அடக்கினுன்' எனக் கூறினுர் இல்லை. ஆகவே, அதற்கு இறைவன் ஐம்புல ஆசையை ஒருகாலத்தில் உடையவனுய் இருந்து, பின்பு மற்ருெரு காலத்தில் அதனை அடக்கினுன்' எனப பொருள்கொளளவேண்டிய கட்டாயம் இல்லை; 'இயல்பாக என்றுமே ஐம்புல ஆசையை அடக்கியிருப்பவன்' என்று பொருள் கொள்ளலாம். அங்ஙனம் கொண்டால் 'இறைவன் ஐம்புல ஆசையை இயல்பாகவே நீங்கியுள்ளவன்' என்பது பொருளாதல் வெளிப்படை. ஆகவே, அதுவே அதற்குப் பொருளாகின்றது.

திருவள்ளுவர் ஐம்புல ஆசையை இறைவன் என்று அடக்கினுன் எனக் கூருவிடினும் அவர் பொறிவாயில் ஐந்தவித்தான் என்றதற்கு ஒரு காலத்தில் அடக்கினுன்' என்றும் பொருள் கொள்ளுதல் கூடுமாகலின், அவ்வாறு ஏன் கொள்ளலாகாது என்று வினவலாம். ஐம்புல ஆசை என்றுமே இலலாதவன் இறைவனன்றி, அதனை ஒருகாலத்தில் உடையவனுய் இருந்து பின் மற்ருெருகாலத்தில் அதனினின்றும் நீங்கினவன் இறைவனுக மாட்டான். ஏனெனில், அவ்வாறு நீங்குவோர் மக்களேயன்றிக் கடவுளல்லர் ஆதலின் எல்லோரும் ஒருகாலத்தில் ஐம்புல ஆசையை ஒருகாலத்து உடையவராய் இருந்து பின்னெரு காலத்தில் நீங்குதல் அல்லது, இயல்பாகவே ஐம்புல ஆசை இல்லாதவர் ஒருவரும் இல்லை' எனக் கூறினுல். 'அங்ஙனம் கூறுவது இறைவன் என்று ஒருவன் இலலை' எனக் கூறுதலாகுமேயன்றி வேறில்லை. 'அங்ஙனம் கூறுவதே திருவள்ளுவர் கொள்கையாய் இருக்குமாயின் அவ்வாறு கூறுவதால் தவறு என்னை என்றுகூடச் சிலர் கேட்கலாம். அது பற்றிக் கூறுவோம்.

'உண்மை உணர்வு மூன்றினால் அடையப்படும்' என்பது ஆன்றோர் அனைவரும் ஒருங்கு உடன்பட்ட கொள்கை. அம் மூன்று, 'சுருதி, யுக்தி, அனுபவம்' என்பன. இம்மூன்றினுள் முதன்மை பெற்றது சுருதி அஃதாவது தொன்று தொட்டு ஆன்றோரால் உடன்படப்பட்ட உண்மை நூல்; இத்தகைய நூல்கள் நம்மால் இயற்கையில் உணர்ந்துகொள்ளக் கூடாத அரிய பொருள்கள் பலவற்றைக் கூறுவனவாகும். இவற்றை நூல்கள் கூறக் கேட்ட பின்னர், அக்கூற்றுப் பொருத்தமாதல் எவ்வாறு என்று நமது அறிவு கொண்டு ஆராய்ந்து பொருந்துவன கொள்வதே 'யுக்தி' எனப்படுவது. 'யுக்தி' என்பது, தமிழில், 'பொருந்துமாறு' என மொழிபெயர்த்து வழங்கப்படும். யுக்தம் - பொருத்தம்; அயுக்தம் - பொருத்த மில்லாதது.

யுக்தியால் 'பொருந்தும்' என உணர்ந்தவற்றைக் கைக் கொண்டு ஒழுகும்பொழுது, அதனால் குறிப்பிட்ட பயன் விளையக் கண்டு, 'முன்னர்ச் சுருதியில் கூறப்பட்டது உண்மை என உணர்வதே அனுபவமாகும். சுருதி பொருள்களை அறிவிக் கும் யுக்தி அவற்றை உறுதிப்படுத்தி அந்நெறியில் ஒழுகுவதற் குரிய ஊக்கத்தைப் பிறப்பிக்கும். அனுபவம்; அவ்வொழுக்கத் தின் பயனாய் விளையும், ஆகவே, உண்மை, இம்மூன்றிற்கும் ஒத்ததாய் இருக்குமன்றி வேறாகாது. எனவே, இம்மூன்றில் ஒன்றிற்கு ஒத்து, மற்றொன்றிற்கு ஒவ்வாதது உண்மையாகாது என்பது வெளிப்படை. இதனால், எதனையும், யுக்தி, சுருதி, அனுபவம் என்னும் மூன்றற்கும் பொருந்தக் கூறுபவரே நல்லாசிரியர், சற்குரு' என்பர் ஆன்றோர்.

இங்ஙனமாகவே, சுருதியில் சொல்லப்பட்ட கூற்று இரு வகையாக அல்லது பலவகையாகப் பொருள்படும் நிலை இருக்கு மாயின், அங்கு யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்தபொருளே பொருளாகக் கொள்ளப்படும். இதனை, 'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்'' என்பர் தொல்காப்பியர். திருவள்ளுவர் தெய்வப் புலமையுடைய சிறந்த நல்லாசிரியர்' என்பதும், அவரது வாய்மொழி நல்லதொரு சுருதி, என்பதும் உயர்ந்தோர் அனைவர்க்கும் உடன்பாடு. ஆகவே, அவரது சுருதி யில் வரும் கூற்று, இருவகையாகப் பொருள்கொள்ளக் கிடக்கு மாயின், அவற்றுள்யுக்திக்கு ஒத்த பொருளே பொருளாகக் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளுங்கால், 'ஐம்புல

ஆசையை இயல்பாக நீங்கினுர் ஒருவரும் இல்லை' என்பது யுக்திக்குப் பொருந்தாமையைக் காண்போம்.

ஐம்புல ஆசையே, 'பற்று' எனப்படுகின்றது. 'யான்' என்றும், 'எனது' என்றும் பற்று இருவகைப்பட்டது. அவற்றுள், 'யான்' என்பது அகப்பற்று; 'எனது' என்பது புறப் பற்று. இவற்றுள் முதலாவது, 'யான்' என்னும் அகப்பற்றே. அதன்வழியாகவே, 'எனது' என்னும் புறப்பற்று உண்டாகின்றது. பற்றை நீக்குங் காலத்துப் புறப் பற்றை முன்னே நீக்கி, அகப்பற்றை அதன்பின்பு நீக்கலாம். ஆயினும், பற்றுத் தோன்றும் பொழுது முன்னே அகப்பற்றுத் தோன்றிப் பின் அதுவழியாகவே புறப்பற்றுத் தோன்றும். ஆகவே, அகப்பற்று நீங்காதவரை புறட்பற்று நீங்கியதாகக் கொள்ள இயலாது. இப்பற்று நீங்குவதற்குத் திருவள்ளுவர் கூறும் வழியாது? 'பற்றற்முன் பற்றினைப் பற்றவேண்டும்' என்பதே. "பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்று அவர் அருளிச்செய்த குறளினை யாவரும் அறிவர்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும்" என்ற குறளால், பற்று நீங்காமல் பிறப்பு நீங்காது; பற்று உள்ளவரையில் பிறப்பு இருந்தே தீரும்' என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். எனவே, 'பிறப்பு நீங்க வேண்டுமாயின், பற்று நீங்கவேண்டும்; பற்று நீங்க வேண்டுமாயின் பற்றற்ருன் பற்றினைப் பற்றவேண்டும்' என்பதும். 'பற்றற்ருன் பற்றினைப் பற்றுதல் தவிர, பற்று அறுதற்கும், அதுவழியாகப் பின் பிறவி நீங்குதற்கும் வேறு வழியில்லை' என்பதும் முடிவாகின்றன. இதனையே கடவுள் வாழ்த்திலும், "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் : நீந்தார் - இறைவனடிசேராதார்" என்று கூறினுர்.

ஆகவே, பற்று அறுதற்குப் பற்றவேண்டிய பற்ருய் உள்ள, 'பற்றற்ருன்' எனப்பட்டவன், இயல்பாகவே பற்று அற்று இருப்பவனு? அல்லது ஒருகாலத்தில் பற்று உடையவனுய் இருந்து, பின்பு பற்று அற்றவனு? என்று பார்க்கும்பொழுது, ஒருகாலத்தில் பற்று உடையவனுய் இருந்து பின்பு பற்று அற்ருன் எனின், பற்றற்ருன் பற்றினைப் பற்றுதல் தவிரப் பற்று அறுதற்கு வேறு வழி இல்லாமையால் அவன் எந்தப் பற்றற்ருன் பற்றினைப் பற்றித் தனது பற்றை அறுத்துக்கொண்டான்' என்ற கேள்வி எழும். அதற்கு ஒருவனைக் குறிப்பின்,

அவன் இயற்கையில் பற்று அற்றவனா? முன்பு பற்று உடைய வனாயிருந்து பின்பு, பற்று நீங்கியவனா என்ற வினா, பின்னும் எழும். யாரேனும் ஒருவனை இயற்கையிலே பற்று அற்று இருப்பவன் என்று கூறாதவரையில் இந்தக் கேள்வி எழவே செய்யும். இவ்வாறு முடிவின்றி வினா எழச் செய்வதை, வரம் பின்றி ஓடல்' என்னும் குற்றம் என்று அளவை நூலார் கூறுவர். ஆகவே, முதலிலே, பற்றற்றான்' என்று குறிப்பிடப் பட்டவனையே இயற்கையில் பற்றற்றவன் என்று கூறுவதுதான் முறை. அதனால் வரும் குற்றம் யாதும் இல்லை. இயற்கையில் பற்று அற்றானாக இருப்பவன் ஒருவனே; அவன்தான் இறைவன் அல்லது கடவுள். அவனது பற்றினைப் பற்றியே பலரும் பற்று அறவேண்டியவர்களாய் உள்ளனர். அங்ஙனம் பற்று அற்று வீடு பெற்றோர் எண்ணிறந்தோர். இனி வீடு பெற இருப் போரும் எண்ணிறந்தோர். எனவே, "பற்றற்றான்" என்ற சுருதி, 'இயற்கையில் பற்று அற்று இருப்பவன்' என்றும், 'ஒருகாலத்தில் பற்று உடையவனாய் இருந்து பின்பு பற்று அற்றவன்' என்றும பொருள்கொள்ளும் வகையில் பொதுவாக நிற்பினும், மேற்கூறியவாறு யுக்திக்கு ஏற்குமாறு ஆராயு மிடத்து, இயற்கையில் பற்று அற்றவன்' என்ற பொருளே தரும் என்பது தெளிவாகின்றது அதே நிலைதான், "பொறி வாயில் ஐந்தவித்தான்' என்பதற்கும் உள்ளது. ஆகவே, 'பொறிவாயில் ஐந்தவித்தான்" என்பது, இயற்கையிலே, 'ஐம்புல ஆசைகளை அடக்கினவன்' என்ற பொருளே தருவதா யிற்று.

'அங்ஙனமாயின் ஆகுக: திருவள்ளுவர் இவ்வாறு இடர்ப் பட்டுப் பொருள் காணுமாறு 'பொறிவாயில் ஐந்தவித்தான்" "பற்றற்றான்" (என்று ஏன் கூறவேண்டும்? 'பொறிவாயில் ஐந்து இல்லாதவன்'. 'பற்று இல்லாதவன்) என்று ஒரே வகையாகத் தெளிவுபடப் பொருள் தருமாறு ஏன் கூறலாகாது' என்று கேட்பின், ஓர் இன்றியமையாமை பற்றியே அங்ஙனம் கூறினார் என்க அஃதாவது, 'பொறி வாயில் ஐந்து இல்லா தவன், பற்று இல்லாதவன்' எனக் கூறின், 'இறைவன் ஐம் புலங்களோடு தொடர்பே இல்லாதவன்' என்று ஆகிவிடும். அவ்வாறு ஆகிவிடின் 'இறைவன் உலகில் உள்ள பொருள் களைக் காண்பதில்லை; கேட்பதில்லை; உறுவதில்லை' என்றாற் போல ஆகி 'உலகத்தையே அவன் அறியான்' என்பதாக முடியும். அவ்வாறு முடிந்தால், அஃது எத்துணைப் பெரிய தவறான கருத்து என்பது சொல்லத் தேவையில்லை. 'இறைவன் எல்லாவற்றையும் அறிபவன்; எல்லாவற்றையும் காண்பவன்;

எல்லாப் பொருளிலும் பொருந்திநிற்பவன் ; அவனே எல்லா வற்றையும் படைக்கின்றான் ; காக்கின்றான்' என்பது உண்மை யாய் இருக்க, இறைவனுக்கு உலகமே தெரியாது ; அவனுக்கும் உலகத்திற்கும் தொடர்பே இல்லை' என்று கூறுவது எவ்வளவு தவறான கருத்து ! அந்தத் தவறான கருத்தைச் சிலர் சிறந்த தென்றுகூடக் கொள்ளலாப. ஆனால், திருவள்ளுவருக்கு அஃது உடன்பாடில்லாமையால், பொறிவாயில் ஐந்து இல்லாதவன்' என்றோ, 'பற்று இல்லாதவன்' என்றோ கூறாமல், "பொறி வாயில் ஐந்து அவித்தான்" என்றும் "பற்று அற்றான்" என் றும் கூறினார் அதனால், பொறிகளால் புலன்களை அறிதல் அவனுக்கு உண்டு ; ஆயினும் அவற்றால் பந்தப்படுதல் அவனுக்கு இல்லை' என்பதே அத்தொடர்களின் கருத்தாம். இறைவனுக்குப் பொறியாவது, அவன் சத்தியே. இக்கருத் தையே, 'நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை என்று திருமுறையும் (6. 50. 3.) "பற்றொடு பற்றதின்றி நின்றனன் பரனுமன்றே" என்று சாத்திரமும் (சிவஞான சித்தி. சூ. 1. 31.) கூறுகின்றன. கௌதம முனிவர், 'அகலிகை' என்னும் மனைவியோடு கூடி வாழ்ந்தாராயினும் அவரைத் திருவள்ளுவர், "ஐந்தவித்தான்" எனக் குறித் திருத்தல் இங்கு நினைக்கற்பாலது. எனவே, ஐம்புலனை அவித் தல் என்பது ஐம்புலநுகர்ச்சியையே அழிப்பது என்று பொருள் படாமல், நுகர்ச்சி இருப்பினும் அதனால் பந்தப்படாமல், தாமரை இலைமேல் தண்ணீர் போலவும், சேற்றில் மேயும் பிள்ளைப்பூச்சி போலவும் ஒட்டின்றி இருப்பது என்றே பொருள் படுதல் அறிந்துகொள்ளலாம். "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் - முனைவன் கண்டது முதனூ லாகும்" என்ற தொல் காப்பியச் சூத்திரத்துள். "வினையின் நீங்கி" என்பதற்கும் கருத்து இதுவே என்பதைப் பேராசிரியர் தமது உரையுள் விளக்கியிருத்தல காணலாம்.

இவ்வாற்றால் பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் பெயரால் திருவள்ளுவர் இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன்' என்பதைக் குறித்தவராயினார். இயல்பாகவே பாசங்களின் நீங்கினமை 'அநாதி முத்தத் தன்மை' என்றும், 'நிராமயம்' என்றும் அருள் நூல்களிற் சொல்லப்படும். "துற வாதே கட்டறுத்த சோதியானை" என்ற திருமுறைத் திருமொழி (6. 11. 1) இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்போனாதலையே குறித்தது. ஆகவே, அறநெறியும், அருள் நெறியும் ஒருதன்மையவாய் இருக்கும் நிலையறிந்து அவற்றின் படி ஒழுகி மக்கள் பயனடையற்பாலராவர்.

சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 27, இதழ் 9, பக்கம் 388 இன் தொடர்ச்சி)

ஐந்து மலங்கள்

மாணுக்கன் : 'ஆணவம், கன்மம், மாயை' என்ற மும் மலங்களையும் பற்றி விரிவாக விளக்கினீர்கள்; இவற்ரோடு பாசங்களின் இயல்பு ஒருவாறு முடிந்ததன்ரோ ?

ஆசிரியர் : ஆம்; முடிந்தது. எனினும் மும்மலங்களோடு மற்றும் இரு மலங்களைக் கூட்டி 'மலங்கள் அல்லது பாசங்கள் ஐந்து' என்பதும் உண்டு.

மாணுக்கன் : அஃது எவ்வாறு ?

ஆசிரியர் : மும்மலங்களுள் மாயை, உலகிற்கு முதற் காரணமாய் உள்ளது. ஆதலின், அது, 'காரண நிலை, காரிய நிலை' என்ற இரண்டு நிலைகளையுடையது அவற்றுள், 'மாயை' என்பது காரண நிலையைக் குறிப்பதாகவே வைத்து, காரிய நிலையில் உள்ளதனை, 'மாயேயம்' என வேருரு பெயராற் குறிப்பர். இப்பெயர் அசுத்த மாயையின் காரியத்துக்கே பொருந்தும். ஏனெனில், மயக்கும் தன்மையுடைமையால், 'மாயை' எனப்படுவது அதுவேயாகலின், சுத்த மாயையும் மாயையே யெனினும் அது மயக்கத்தைச் செய்யாமையால், 'விந்து, குடிலை' முதலிய பெயர்களால் கூறப்படும் என்பதை முன்பே கூறினேம். ஆகவே, அதன் காரியங்கள் 'வைந்தவம்' என்று சொல்லப்படும் என்பதும் முன்பு சொல்லப்பட்டது.

மாணுக்கன் : அங்ஙனமாயின், 'ஆணவம், கன்மம், மாயை, மாயேயம்' என மலங்கள் நான்காகின்றன. ஐந்தாவதாய்ச் சொல்லப்படுகின்ற மற்ருென்று யாது ?

ஆசிரியர்: மேற்கூறிய நான்கினும் வேருக உள்ள மற்றென்று 'திரோதானம்' என்பது. இது 'திரோதானகரி', 'திரோதாயி' என்றும் சொல்லப்படும். இஃது உண்மையில் மலமோ அல்லது பாசமோ அன்று; இறைவனது அருளாகிய சத்தியே. எனினும், இதுவே மேற்கூறிய பாசங்கள் தம் தொழிலைச் செய்யுமாறு அவற்றின்வழி நின்று அவற்றது சத்திகளைத் தூண்டுகின்றது. அதனுலே அம்மலங்களின் காரியங்களாகிய மறைப்புக்க்ள் நடைபெறுகின்றன. இஃது இல்லையேல் பாசங்களின் செயல்களாகிய மறைத்தல் தொழில்கள் நிகழமாட்டா. அதனுல் இதுவே ஒரு மலமாக அல்லது பாசமாகச் சொல்லப்படுகின்றது. இறைவன் செய்யும் தொழில்கள் ஐந்தில், 'மறைத்தல்' என்பது, இவ்வாறு இத் திரோதான சத்தியைக்கொண்டு மறைத்தலைச் செய்வதேயாகும்.

இஃது எதுபோன்றது எனின், ஓர் அரசன் தன்னிடத்திலுள்ள மல்லர்களோடும், புலவர்களோடும் மாறுபட்டு அவர்களை மற்போரிலும், சொற்போரிலும் வெல்லக்கருதிப் பிற இடங்களிலிருந்து வந்து அறைகூவி நிற்கும் மல்லர்களையும். புலவர்களையும் வரவேற்று அவர்கட்கு உண்டி, உறையுள் முதலியன தந்து, அவையைக் கூட்டித் தன் மல்லர்களோடு மற்போர் புரியவும், புலவர்களோடு சொற்போர் புரியவும் செய்தல் போன்றதாம். இவ்வாறு அவன் செய்வது, தன்னிடத்திலுள்ள மல்லர்கட்கும், புலவர்கட்கும் இடர் விளைவிக்க வேண்டும் என்னும் கருத்தினுல் அன்று. மற்று, அவர்களை வெல்லக்கருதி வருபவர் தங்களது ஆற்றலைத் தாங்கள் பெரிதாகக்கருதி அடைந்திருக்கும் செருக்கை, அவர்களது ஆற்றல் முழுவதையும்வெளிப்படுத்து முகத்தால் போக்குதற்பொருட்டும், அங்ஙனம் போக்கும் முகத்தால், தன்னிடத்து உள்ளவர்கட்கு வெற்றியுண்டாகி, அவர்கள் புகழ் மிகுதற்பொருட்டுமேயாகும். அயல் நாட்டிலிருந்து வருபவர்களை அரசன் வரவேற்று உபசரியாதுவிடின், மேற்குறித்த போர்கள் நிகழவழியில்லை. ஆகவே, அரசனது செயல் மேற்குறித்த போர்களைத் தூண்டும் கொடுஞ்செயல்போலத் தோன்றினுலும், நன்கு சிந்தித்துப் பார்க்கும் பொழுது நற்செயலாதல் விளங்கும். இவ்வாறே இறைவன் தனது சக்தியால் பாசங்களது தீய சத்திகளைத் தூண்டி உயிர்கட்கு மறைப்பை உண்டாக்குவதும் கொடுஞ்செயல்போலத் தோன்றினுலும், நன்கு சிந்திக்கும்பொழுது, நல்ல செயலேயாதல் விளங்குவதாம்.

அஃது எங்ஙனம் எனின், ஆணவம், கன்மம், மாயை என்பவற்றின் சத்திகளை இறைவன் தனது சத்தியைக் கொண்டு

தூண்டாதுவிடின், அவற்றால் பந்தம் உயிர்கட்கு என்றும் இருந்தேதீரும். ஆகையால் அச்சத்திகளைத் தூண்டிச் செயற் படுத்தினால் அவை செயற்பட்டுத் தமது சத்தி மெலிவடைந் தொழியும். அங்ஙனம் ஒழிந்தால், அவற்றால் உண்டாகும் மறைப்பு நீங்கி விளக்கம் பெற்று உயிர்கள் உயர்நிலையை அடையும். ஆதலால், அங்ஙனம் செய்தல் நற்செயலேயாம் என்க. எனவே, திரோதன சத்தியும் அருளேயாயினும், அது மறக்கருணையாய்க் கொடுமைபோலத் தோன்றுதலின், அதனை 'அருட்சத்தி' என வழங்காது, 'திரோதானசத்தி' என்றும். 'திரோதான மலம்' என்றுமே வழங்குவர். மலங்களின் சத்தி மெலிந்து, உயிர்கள் பக்குவ நிலையை அடையுமாயின், இத் திரோதான சத்தியே தனது மறுதலைச் செயலினின்றும் நீங்கி அருட்சத்தியாக மாறி ஆன்மாவில் பதியும். அதுவே, 'சத்தி நிபாதம்' எனப்படும்.

"பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
    பண்ணுதலால் மலம்எனவும் பகர்வர்; இது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
    நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே"

எனவும்,

"முற் - சினமருவு திரோதாயி கருணை யாகித்
    திருந்திய சத்திநிபாதம் திகழு மன்றே"

எனவும் திரோதான மலத்தின் இயல்புகளை, 'சிவப்பிரகாசம்' என்னும் நூல் இனிது விளக்குதல் காண்க.

மலங்களுள் ஆணவமே முதலாவது. அஃது உயிர்க்குச் செம்பிற்குக் களிம்புபோல இயற்கைக் குற்றமாய், உயிர் என்று உண்டோ அன்றே அதனோடு உளதாயிற்று. நோய்போல உள்ள ஆணவமலம் உயிர்கட்கு இயற்கையாய் இருப்பதால், அதற்கு மருந்துபோல உள்ள கன்மம் மாயைகளும் அவ் வாணவ மலங் காரணமாக உயிர்கட்கு அன்றே உளவாயின. இது, அரிசி என்று உண்டோ அன்றே அதற்கு உமியும். தவிடும், முளையும் இருத்தல் போன்றதாம்.

"மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மைசெய் போக பந்தபோத்திருத் துவங்கள்பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்"

" மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும்
ஏயுமும் மலங்கள் தத்தந் தொழிலினைச் செய்ய ஏவும்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரியதென்றும்
ஆய்வர்; இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து
நிற்கும் "

என்ற சிவஞான சித்திச் செய்யுட்களைக் காண்க. இதில், 'நெல்' என்றது, அரிசியை.

" மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று, முயங்கி நின்று
பாகம்மிக உதவு திரோதாயி ஒன்று,
பகர்மாயை ஒன்று, படர் கன்மம் ஒன்று,
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாயேயத் திரட்சி ஒன்று*
ஆகமலம் ஐந்தென்பர்; ஐந்தும் மாறாது
அருள்என்ப தரிதென்பர் அறிந்து ளோரே "

என்ற சிவப்பிரகாசச் செய்யுள், ஐந்து மலங்களையும் ஒருங்கு தொகுத்துக் கூறுகின்றது. "மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில்பொரு மத்துறவே" என்ற திருவாசகப் பகுதியிலும், ஐந்து மலம் கூறப் படுதல் காணலாம்.

"மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்"
என்ற சிவஞான சித்திச் செய்யுளில், 'முளை, தவிடு உமி, என்ற உவமைகள் முறையே, 'கன்மம், மாயை, ஆணவம்' என்பவற்றிற்கு உரியனவாம். இனி, 'போகம், பந்தம், போத்திருத் துவம் என்பவற்றைச் செய்யும்' என்றதையும் அவ்வாறே நிரல் நிரையாக. கன்மம் போகத்தையும், மாயை பந்தத்தையும், ஆணவம் போத்திருத்துவத்தையும் பண்ணும் என்றே கொள்ள வேண்டும்.

முளை என்றது, முளைத்தற் சத்தியை. கன்மம் முளைத்தற் சத்திபோல நின்று போகத்தைப் பண்ணுதலாவது, முளைத்தற் சத்தி முளைக்கு முதற்காரணமாய் நின்று அதனைத் தோற்றுவித் தல்போல, கன்ம மலம் இன்பமும், துன்பமுமாகிய போகத்திற்கு (நுகர்ச்சிக்கு) முதற் காரணமாய் நின்று, அவற்றை ஆன்ம அறிவின்கண் தோற்றுவித்தலாம்.

* 'மாமாயைத் திரட்சி' என்பது உண்மைப் பாடம் அன்று.

மாயா மலம் தவிடுபோல நின்று பந்தத்தைச் செய்தலாவது, தவிடு முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவித்தற்குத் துணை புரிந்துநிற்பது போல, உயிர் இன்பத் துன்பங்களாகிய போகங் களை நுகருமாறு அவற்றுக்குச் சார்பாய் உள்ள தனு கரண புவன போகங்களைத் தந்து உயிரை அவற்றொடு பிணிப்புண்டு நிற்கச் செய்து துணைபுரிதலாம்.

ஆணவ மலம் உமிபோல நின்று போத்திருத்துவத்தைப் பண்ணுதலாவது, உமி, முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவித் தற்கு அச்சத்தியைக்கெடாது காத்துநின்று நிமித்தமாதல்போல, இன்பத் துன்பங்களைத் தோற்றுவிக்கின்ற கன்ம மலம் உயிரை விட்டு நீங்காதவாறு விருப்பு வெறுப்புக்களால் உயிருக்கு நுகர் வோனும் தன்மையைக் கொடுத்து அக்கன்மத்தை நிலைநிறுத்தி நிமித்தமாதலாம். போத்திருத்துவம் - புசிப்போனுந் தன்மை.

ஆகவே, 'முளைத்தல்' என்னும் காரியத்திற்கு முளைத்தற் சத்தி முதற் காரணமும், தவிடு துணைக்காரணமும், உமி நிமித்த காரணமுமாதல்போல, இன்பத் துன்ப அனுபவமாகிய காரியத் திற்குக் கன்ம மலம் முதற் காரணமும், மாயா மலம் துணைக் காரணமும், ஆணவ மலம் நிமித்த காரணமுமாதல் விளங்கும். இப்பகுதிக்குப் பிறவாறு உரைப்பன உரையல்ல.

நிமித்த காரணம் இல்லாது முதற்காரணமும், துணைக் காரணமும் செயற்படா ஆகலின், நிமித்தகாரணமாகிய ஆணவ மலம் உள்ள வரையில் பலவகை உலகங்களில், பலவகைப் பிறப்புக்களில் பிறந்தும், இறந்தும் இன்பத் துன்பங்களை அனுபவிக்கின்ற பந்தநிலை நீங்காது என்பதும், ஆணவ மலம் நீங்கும் பொழுது ஏனைய மலங்களும் நீங்க, பிறப்பிறப்பாகிய பந்தமும் நீங்கி வீடு உண்டாகும் என்பதும் நன்கு புலனு வனவாம்,

ஆணவ மலம் உயிருக்கு நேர் பகையாய் நின்று அதன் ஆற்றலைத் தடுத்து நிற்றலால், அது, 'பிரதி பந்தம்' எனப் படும். கன்ம மலம் ஆணவ மலத்தின் வழி வந்து உயிரைப் பந்தித்தலால், அது, 'அநுபந்தம்' எனப்படும். அநு - வழி. மாயா மலம் கன்மங் காரணமாக உயிரை வேறுநின்று பற்றிப் பந்தித்தலால், அது, 'சம்பந்தம்' எனப்படும்.

இங்ஙனம் பாசங்களின் இயல்புகளை ஒருவாறு உணர்ந்து கொள்க.

(தொடரும்)

மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயம்
பேச்சிக்கால் மண்டபத்தில் (சுவாமி சந்நிதி
குடைவறை) பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள

ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிலா திருவுருவம்.

மதுரை ஸ்ரீமீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் பிரதிஷ்டையில்



கும்பாபிஷேகக் கடங்கள் வலமாக எழுந்தருளல்



கலந்துகொண்டு தரிசித்த பெருமக்கள்

மதுரையில்:



ஸ்ரீ குருஞானசம்பந்தர் பிரதிஷ்டையானவுடன்
ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாற்றை விளக்குதல்.

திருப்பனந்தாள்
ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
மண்டலாபிஷேக நிறைவு விழா



இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாவின்போது
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

உ
குருபாதம்

அருளுரை*

ஆவணிமூலச் சிறப்பு

" ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா.''

இன்றைய நாள் ஒரு நன்னாள். நம் வாழ்வில் ஒரு பொன்னாள். காரணம், இது வாக்கும் மனமும கடந்த வான்பொருளாகிய இறைவன் தன்னை மண்ணுலகில் உள்ளார் பலரும் ஊனக்கண்ணால் கண்டு உய்திபெறும்வண்ணம் எளிய திருக்கோலத்துடன் எழுந்தருளிய சிறந்த நாளாய் இருப்பதேயாம்.

" ஆறாறு தத்துவத்தும் ஆணவத்தும் சாராமல்'' என்ற எங்கள் ஆதி பரமாசாரியரது அருள்வாக்கின்படி முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்பவன் இறைவன். தத்துவங்கள் அனைத்திலும் மேலாய் நிற்பது நாத தத்துவம். அதன் முடிநிலையை 'நாதாந்தம்' என்பர் ஆன்றோர். அந்த நாதாந்தத்திற்கும் அப்பால் உள்ளவன் இறைவன். அவன், தத்துவங்கள் அனைத்திலும் கீழாய் உள்ள, 'பிருதிவி' என்னும் தத்துவமாகிய மண்ணின்மேல் மதுரை மாநகரில் குதிரைச் சேவகனாகவும், மண் சுமக்கும் கூலியாளாகவும் எழுந்தருளிய அரிய நாள் இந்த ஆவணிமூல நாளேயாகும்.

நாதாந்தத்தையும் கடந்த இறைவன் நவையுடைய நானிலத்தின்மேல் இவ்வாறு எழுந்தருளியது ஏன் ? அடியாரது அன்பின் பொருட்டேயாம். தேவர் கனவிலும் காண்பரியானாகிய

---

* திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் பேராசிரியர். டாக்டர். திரு. வ. ஆ. தேவசேனாபதி M. A., Phd., அவர்கட்கு "சித்தாந்தவித்தகர்'' என்னும்பட்டம்வழங்கிப் பொன்னாடை போர்த்து 1-9-68 இல் வழங்கிய அருளுரை.

சிவபெருமான், தன் அடியவர்க்கு நனவிலும், அஃதாவது விழித் திருக்கும் நேரத்திலும் அவர்கள் கண்முன் தோன்றிக் கருணை பொழிகின்றான். அதுபற்றி, அப்பெருமானே ஒரு சமயம் "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" என்று தன்னைச்சொல்லிக் கொண்டதை நாம் அறிவோம்.

இறைவன் விரும்புவது மெய்யன்பு ஒன்றே; அந்த அன்பில்லாவிடின், கலைஞானமும், சமய ஆசாரங்களும், பிறவும் பயன்படுவதில்லை. தானம், தவம் முதலியனவும் - ஏன்? வழிபாடுங்கூடப் பயனளிப்பதில்லை.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே"

என்று திருமூலரும்,

"யாவ ராயினும் அன்பரன்றி
அறியொணு மலர்ச் சோதியான்"

என்று மாணிக்கவாசகரும் அருளிச்செய்தல் காணலாம்.

அன்பிலும், தலையன்பு, இடையன்பு, கடையன்பு எனப் பலவகை உண்டு. அவைகளில் தலையாய அன்பினை உடையவர்க்கே இறைவன் மிக எளியவனாக வந்து அருள் புரிகின்றான். எங்கள் ஆதிபரமாசாரிய சுவாமிகளும் இத்தகைய தலையன்பு உடையவர்கட்கே உண்மைஞானத்தை உபதேசித்தல்வேண்டும் என்பதை,

"அன்பு மிகஉண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் — இன்பம்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண் டாய் ஓடி
வருங்கா ரணர்க்குண்மை வை"

என்று அருளிச்செய்தார்.

இவ்வாறான தலையன்பு உலகில் எங்கோ ஒருவர் இருவர்க்கு முன்னைத் தவப்பயனால் அமைகின்றது. அவர்கள் கல்வி, செல்வம், அதிகாரம் முதலிய உலகியல் முறைகளில் ஒன்றும் இல்லாதவர்களாயும் இருக்கலாம். ஆயினும், பக்தி வலையிற்

படுவோனுகிய இறைவன் அவர்களது தலையன்பிற் கட்டுண்டு விடுகிருன். மதுரையில் பிட்டு விற்று உயிர் வாழ்பவளாகிய எளிய நரைமூதாட்டி ஒருத்தி 'வந்தி' என்னும் பெயருடை யவள் இத்தகைய பேரன்பினை உடையவளாய் இருந்தாள். அதனல், இறைவன் மண் சுமக்கும் கூலியாளாய் வந்து அவ ளது பிட்டினை வாங்கி உண்டு, மண் சுமந்து; வைகைக் கரையில் அவருக்கு வரையறுக்கப்பட்ட பங்கினை அடைத்தது மட்டுமின்றித் தனது பொன்மேனியில் பிரம்படியையும் பட்டுப் புண்ணும் சுமந்தான். இஃது அம்மூதாட்டியினது தலையன்பின் பொருட்டே என்பதைக் குமரகுருபரர்,

" அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே "

எனப்பாடுகின்ருர்.

பெண்சுமந்த பாகத்தையும், விண் சுமந்த கீர்த்தியையும், கண் சுமந்த நெற்றியையும் உடைய கடவுள், மதுரையில் மண் சுமந்து கூலிகொண்டதேயன்றி, அக்கோவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனியனும் ஆயதனை மணிவாசகர் தமது அம்மானைப் பாட்டில் அகமுருகிப் பாடுகின்ருர். அவன் மண் சுமந்ததும், புண் சுமந்ததும் ஏன் என்று விளுவுவார்க்கு, அவரே,

" ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும் "

என்று விளக்கம் தந்தார்.

மாணிக்கவாசகரும் 'அழுதடி அடைந்த அன்பர்' எனப் பெயர்பெற்ற தலையன்பை உடையவர் என்பது பலரும் அறிந் ததே. பணம் படைத்தவர்களுக்கே பணத்தின்மேல் ஆசை மேலும் மேலும் உண்டாக, அது காரணமாகத் தம்மிடம் உள்ள பணத்தைச் சிறிதாக நினைத்து மேலும் மேலும் பணத்தைச் சம்பாதிக்க விரும்புவதுபோல, பேரன்பினையுடையவராகிய வாதவூரடிகள் தம்மிடம் உள்ள அன்பைச் சிறிதாக எண்ணி,

" கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் "

எனக் கண்ணப்பரது அன்பைப்போன்ற அன்பினைப் பெற விழைகிறார். ஆதலின் இறைவன் அவருக்குக் குதிரைச் சேவகனாய் மதுரை வீதியில் மன்னனும் பிறரும் காண எழுந்தருளினான். அப்பொழுது மன்னன் முதலானோர் குதிரைகளைக்கண்டு உலக ஆனந்தங் கொண்டனர். ஆயினும் மாணிக்கவாசகர் தமக்குப் பரமன்செய்த திருவருளை நினைந்து, அந்தப் பரமானந்தத்திலே திளைத்தார். அதன் பயனாகப் பின்னர்ப் பல திருவாசகப் பாடல்கள் எழுந்தன. இதனை,

"பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
கருவாதை யாம்அறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தே"

என்று போற்றிப் புகழ்கின்றது, 'திருக்களிற்றுப்படியார்' என்னும் சாத்திரம். அத்தகைய பரமானந்தப் பயன் கிடைத்தது இந்த ஆவணிமூலத் திருநாளே.

இறைவன் மாணிக்கவாசகர் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கி மதுரைநகர் வியக்கும்படி கொண்டுவந்து அருள் செய்தது ஆவணி மூலத் திருநாளே.

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெலாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி
செய்வ தொன்றும் அறியேனே"

என்றும்,

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை உன்கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெலாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேநின் பேரருளே."

என்றும் அருளிய திருவாசகத்தையும்,

" நரியைக் குதிரை செய்வானும்
நரகரைத் தேவுசெய்வானும் "

என்னும் தேவாரமும் காணத்தக்கன.

பரிகளாய் வந்த நரிகள் அப்பெருமான் திருவிளையாடலால் அன்றிரவே நரிகளாயினமையால் வாதவூரருக்கு உண்டாகிய இடரினைப் போக்க இறைவன் வையையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வரச்செய்தான். ஆகவே, அவன் அடியவட்காக மண் சுமந்ததும் இந்நாளோடு தொடர்புடையதே.

நம் ஆதீன குருமுதல்வர்க்கு ஆன்மார்த்த மூர்த்தியாய் மதுரைப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் கிடைத்த பெருமான் ஆலவாய்ச் சொக்கலிங்கமே. அதனால், நம் ஆதீனத்திற்கு இவ் ஆவணிமூலத் திருநாள் சிறப்புடைய நாளாகத் தொன்று தொட்டு இலங்கி வருகின்றது. இவ்விழாவில் சில ஆண்டுகளாகச் செந்தமிழ்ச்சொக்கன், தமிழ்மொழியிலும் சைவ சித்தாந்தத்திலும் ஆர்வமும், ஆற்றலும் உடைய அறிஞர்கட்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கும் திருவருளைப் புரிந்துவருகின்றான். அம்முறையில் இவ்வாண்டில் பட்டம் பெற இருப்பவர் நமது ஆதீன உபதேச நூலாகவுள்ள சிவஞான சித்தியாரை ஆய்ந்து ஆங்கிலத்தில் விளக்கங் கண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற திரு. வ. ஆ. தேவசேனாபதியாவார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தத்துவப்பகுதியில் துணைப் பேராசிரியராக இருக்கின்ற இவர் அன்பும் பண்பும், அடக்கமும் ஆற்றலும் உடையவர் சிவபக்தியிற் சிறந்தவர். ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கர் திருவருள் இவருக்கு இன்று " சித்தாந்த வித்தகர் " என்னும் சிறப்புப் பட்டம் வழங்கியருள்கின்றது. இவர் ஆலவாய் அண்ணலின் அருளால் எல்லா நலமும் இனிதே எய்தி செகமெங்கும் 'சித்தாந்தச் செந்நெறி பரவப் பணியாற்றிப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறோம். இவ்விழாவில் பங்கு கொண்டுள்ள அன்பர்கள் பலரும் செந்தமிழ்ச்சொக்கர் திருவருள் பெற்றுச்சிறப்புடன் வாழ்வார்களாக.

" ஞாலம் நின் புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே "

கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

(மலர் 27, இதழ் 9, பக்கம் 399 இன் தொடர்ச்சி)

"குளப்புவழி அன்ன கவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் விசியுறு பச்சை
எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று
ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி
எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா இல்லா அமைவரு வறுவாய்ப்
பாபபணந்தன்ன ஓங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூடு இருக்கைத் தண்பிணித் திவவின்
ஆய்தினை அரிசி அவையல் அன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித்தொடையல்"

(பொருநர். 4 - 18)

யாழின் கோடு கரிய நிறம் உடையது. களாப்பழத்தைப் போன்ற கருங்கோடு என்று கவிஞர் கூறுதல் வழக்கம். இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் மலைபடுகடாம் பாட்டில்,

"களங்கனி அன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்" (36-37)

என்று கூறியுள்ளார். புறநானூற்றில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

" களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாசன் பனுவல் பாணர் "

என்றும், பேகனைப் பாடிய பரணர்,

" களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப்பண்ணி "

என்றும் கூறுவதைக் காணலாம்.

யாழின் முறுக்கிய நரம்பு, பொன்னைக் கம்பியாகச் செய்தாற்போன்று இருப்பதைக் கவிஞர் கூற்றால் அறியலாம்.

" பொன்வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் " (சிறுபாண் 34 - 35)

என்று இடைக்காதினாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

" பொன்வார்ந்தன்ன டரிஅடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி " (பெரும்பாண் 15 - 16)

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் கூறியுள்ளனர். இவையே அன்றி சொற்றிறம் படைத்த நற்றிணையிலும்,

" பொன்புனை நரம்பின் இன்குரல் சீறியாழ் " (380)

என்ற குறிப்பும் ஈண்டு நோக்கத்தக்கது.

" பொன்வார்ந்தன்ன புரிஅடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திருப்ப " (புறம்-135)

என்று மோசியாரும்,

" பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக் குரல் சீறியாழ் " (புறம்-309)

என்று கோவூர்க் கிழாரும் குறிப்பிட்டுள்ளனர்.

இராப்போதில் இசைத்தற்குரிய யாமயாழ் பற்றி மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில்,

" யாம நல்யாழ் நாப்பண் நின்ற
முழவின் மகிழ்ந்தன ராடி" (584 - 85)

என்று கூறுகிருர். யாமயாழ் முதற்சாமத்தில் வாசித்தற் குரியது என்பது நச்சினர்க்கினியர் உரையால் தெளிவாகிறது. இவ்யாழ்பற்றி வெள்ளி வீதியாரும் நற்றிணையில் குறிப்பிடுகிருர்.

" விரல் கவர்ந்துழந்த கவர்வின் நல்யாழ்
யாமம் உய்யாமை நின்றது" (நற்றிணை - 335)

யாமயாழில் விளரிப்பாலை இசைத்தலை,

" விளரிப்பாலையில் தோன்றும் யாமயாழ்" (பரி 11 : 128)

என்ற பரிபாடல் அடிகளால் அறிகிருேம்.

பண்ணும், தாளமும் இணைந்து வருவதே பாட்டாம். பண்டைத் தமிழர் இசைத்த பண்கள் பலப்பல. நூற்றுமூன்று பண்கள் நான்கு வகைப்படும், என நுவல்வார் அடியார்க்கு நல்லார். அவையே பண்ணும், பண்ணியலும், திறமும் திறத் திறமுமாம். இவைகளின் வடமொழிப் பெயர்கள், சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என்பனவாம். பண்கள் பல வற்றுள்ளும் குறிஞ்சி, மருதம், பாலை செவ்வழி ஆகிய பண்கள் சங்கப்பாக்களில் மிகுதியாக வருவனவாம்.

பாலைப்பண் மறவுணர்வைப் பெயர்க்கும் திறம் படைத்தது. பொருநராற்றுப்படையில் 'ஆறலைகள்வர் தம்படைக்கலங்களைக் கைவிடும்படி, அவருள்ளத்திலிருந்த அருளுக்கு மாறுன மனத் தைப் பெயர்க்கும் பாலை" என்று குறிக்கப்பட்டிருப்பதை முன்பே கண்டோம். பாலை பண் கொடுமை நிறைந்த கல்நெஞ் சரையும் உருக்கும் என்பதைப் பதிற்றுப்பத்துப் புலப்படுத்து கிறது. ஒன்றை ஒன்று ஒவ்வாத இன்பத்தை உண்டவர்க்கு அளிக்கும் பலதிறத்து மது என்பதை உவமையால் விளக்கவந்த கபிலர்,

' தீந்தொடை நரம்பின் பாலைவல்லாள்
பையுள் உறுப்பில் பண்ணுப் பெயர்த்தாங்கு"
(பதிற்று - 65)

என்று கூறுகிறார். இன்னிசை தொடுக்கும் நரம்பினை உடைய பாலையாழ் வல்லார் அழுகைச் சுவைக்குரிய உறுப்பினை உடைய பாலைப்பண்களை ஒவ்வொன்றாக மாறிமாறி இசைத்தாற் போன்று வேறு வேறு இன்பத்தை அளிக்கும் பலதிறத்து மதுவாம். பண்கள் எல்லாவற்றுள்ளும் வருத்தத்தைச் செய்யும் உறுப்பினை உடையது பாலையே. பேரியாழில் பாலைப்பண் இசைப்பதைப் பதிற்றுப்பத்து, பலவிடங்களிலும் குறிக்கிறது.

" வாங்கிடு மருப்பின் தீந்தொடை பழுனிய
இடனுடைப் பேரியாழ் பாலைபண்ணி " (பதிற்று - 66)

' தொடைபடு பேரியாழ் பாலைபண்ணி " (பதிற்று - 46)

" விரல்கவர் பேரியாழ் பாலைபண்ணி " (பதிற்று - 57)

சிலப்பதிகாரத்தில் அடியார்க்குநல்லார் பெரும்பாலைப் பண்கள் ஏழினைப்பற்றியும் விரிவாக எழுதிச்செல்கிறார். செம்பாலை, படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை, கோடிப்பாலை விளரிப்பாலை மேற்செம்பாலை ஆகிய ஏழும் பெரும்பாலைப் பண்களாம்.

" மேலதுழையிளி கிழது கைக்கிளை
வம்புறுமரபிற் செம்பாலை ஆயது
இறுதியாதி யாக அங்கவை
பெறுமுறை வந்த பெற்றியின் நீங்காது
படுமலைச் செவ்வழி பகரும் பாலையெனக்
குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் திரிந்தாங்கு
இளிமுதலாகிய எதிர்படு கிழமையும்
கோடி விளரி மேற்செம்பாலையென
நீடிக்கிடந்த கேள்விக் கிடக்கையின் "
(சிலம்பு. அரங்கேற்றுகாதை 80 - 89)

என்று இளங்கோவடிகள் கூறியிருத்தல் காண்க.

" ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி "
(அரங்கேற்றுகாதை 70 - 71)

இவ்வடிகட்கு அடியார்க்குநல்லார் ''ஆயப்பாலையாய் நின்ற பதினாற்கோவை பொலிந்து செப்பமுடைத்தாய்ப் பாடலியல் பொத்து அமைந்த சிறப்புடைத்தாகலான் அதிலே செம்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, படுமலைப்பாலை, மேற்செம்பாலை யெனப்பட்ட ஏழு பாலையினையும் இணை நரம்பாகத் தொடுத்து நிரப்ப நிறுததுக்காட்டல் காரண மாக'' என்று உரை எழுதிச்செல்கிறார்.

பாலைப்பண் ஏழும் யாழில் பிறப்பதைப் பரிபாடலில்,

'' புரிநரம்பின் கொளையபுகல் பாலையேழும்
எழூஉப்புணர் யாழும் இசையும் கூட '' (பரி. 7)

என்னும் அடிகள் எடுத்துரைக்கும்.

விளரிப்பாலை நெய்தல் நிலத்திற்குரிய இரங்கினர் பாடும் பண்ணாகும். கானல்வரியில் விளரிப்பாலையைப் பற்றி இளங்கோ

'' நுளையர் விளரி நொடிதரும்தீம் பாலை ''

என்று குறிப்பிடுகிறார். ' விளரிப்பாலையில் தோன்றும் யாம யாழ்'' என்று பதிற்றுப்பத்தில் வருவதும் அறிந்ததே. பெரும் பாலைப் பண்களுள் ஒன்றான படுமலைப் பாலையும் பல விடங் களில் பேசப்படுகிறது.

'' படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ்
ஒல்கல் உள்ளமொடு ஒருபுடைத் தழீஇ '' (புறம் 135)

'' படுமலை நின்ற நல் யாழ்நரம்பு
எழீஇ அன்ன '' (நற்றிணை 139)

குறுந்தொகையுள் பதடைவைகலார் என்பார் (333)

'' பாணர் படுமலை பண்ணிய எழாலின் ''

என்று கூறுகிறார். மலைவாழ் மக்கள் குறிஞ்சிப் பண் இசைப் பதைத் திருமுருகாற்றுப்படையால் அறியலாம்.

'' நணிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சிபாடி '' (238 - 39)

குறிஞ்சிப்பண்ணை வண்டுகள் தம் கிளையின் ஒலியாகக்கொண்டு செவிமடுத்துக் கேட்கின்றனவாம்.

" குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத்தோர்க்கும்"
(பெரும் பாண். 180 - 83)

பக்கமலைகளில் விறலியர் குறிஞ்சி பாடுவதை மலைபடுகடாம்,

" இறும்பூது கஞலிய இன்குரல் விறலியர்
நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சிபாடி "

என்று கூறுகிறது. கொடிச்சி பாடிய குறிச்சி கேட்டுக் குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது மழகளிறு அறிதுயில் கொண்டது என்ற செய்தி அகப்பாட்டால் நாம் அறிந்த ஒன்றே.

மருதப்பண்ணைச் சீறியாழில் வாசிப்பதை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப பெருங்கௌசிகனார்,

" மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"

என்று குறிப்பிடுகிறார். மலைபடுகடாம் பாடலில் காலமறிந்து தமிழர் பண்களைப் பாடினர் என்பது இலக்கியத்தால விளங்கும். மருதம் காலைப்பொழுதில் இசைத்தற்குரிய பண்ணாகும். மதுரைக் காஞ்சியில மாங்குடி மருதனார்.

" சீரினிது கொண்டு நரம்பினி துய்த்தி
யாழோர் மருதம் பண்ண " (657 - 58)

என்று குறிப்பிடுகிறார். மலைபடுகடாம் பாடலில்,

" எழூசெதறி களமரோதையோடு நல்யாழ்
மருதம் பண்ணி " (469 - 70)

என்ற குறிப்பையும் காணலாம், காலையில் மருதப் பண்ணையும் மாலையில் செவ்வழிப பண்ணையும் இசைப்பது வரலாற்று முறைமையாம் என்று வனபரணர் கூறுகிறார். பாணருக்கு வேண்டுமளவு நிறைந்தபொருளை நள்ளி வழங்கியமையால் வரலாற்று முறைமையை மறந்தனராம்.

' நள்ளென், மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் " (புறம். 149)

என்று பரணர் கூறுவது காண்க. (தொடரும்)

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 27, இதழ் 9, பக்கம் 403 இன் தொடர்ச்சி)

5. திருமணம் (1)

தரைபுகழ் தென்னன் செல்வி தரணியாளும் அழகைக் கண்டோம். இனி அவளை விடையவன் மணந்து ஆண்ட வியத்தகு செய்தியை விளம்புவோம். தடாதகை குழவிப் பருவம் நீங்கி குமரிப் பருவமெய்தினள். நூலென்ற இடையும் நுதலென்ற பிறையும் இருளென்ற குழலும் இக்கென்ற (கரும்பு) மொழியும் பெற்று மணச்செவ்வி தலைவரப்பெற்ற மகளைக் காணும்போதெல்லாம் இவளுக்கேற்ற மணவாளன் என்று வருவானோ என்று காஞ்சனமாலை வருந்தலானாள். தன் கவலையைக் கன்னி நாடாள்பவளிடத்தில் கூறினாள். அவளோ சிறிதும் இதுகுறித்து எண்ணாமல் 'உனது எண்ணம் ஆம் பொழுது ஆகும். நான் திசையெங்கும் எனது கொற்றம் நாட்டி மீள்வேன்' என்றுகூறி திக்குவிசயத்தில் நாட்டம் கொண்டாள்.

ஆரணங்கு தலைமையில் அணிவகுத்தது படை :

அமைச்சர்களும் வேந்தர்களும் அம்மையின் கருத்தறிந்து படைகளை வகுத்தனர். வையத்தின் துயர்துடைக்க வந்த தூயவள் சங்குகள் முழங்க வையத்தில் (தேரில்) ஏறினாள். தடாரியும், பேரியும், முருடும் மொந்தையும், உடுக்கையும், தக்கையும், பம்பையும் படகமும், முழவமும் தட்டையும், சின்னமும், தாரையும், காளமும் தாளமும் ஆரவார முழக்கம் செய்ய வில்லும் கணையும் தோலும் (கேடயம்) வாளும் கொண்ட ஆயக் கூட்டத்தினர் உடன்வர அம்மை வெற்றிக்கொடி நாட்ட வீறுகொண்டெழுந்தாள்.

படை நடந்தது பாரதிர்ந்தது :

வீரர் கூட்டம் எண்புதைக்க, யானை குதிரைப் பெருக்கம் மண் புதைக்க, பதாகையும் கவிகையும் விண்புதைக்க, படையெழுப்பும் புழுதி கதிரவனின் கண்புதைக்க நால்வகைச் சேனையும் வழிநடந்தது. தேர்கள் கப்பல்களாக - பரிகள் அலையாக - வாட்கள் மீனாக - கவரிக் கூட்டம் நுரையாக, முரசங்களின் ஒலி கடலொலியாக முழங்க - படைகள் கடலை ஒத்து விளங்கின. அவனியாளும் அரசியின் அருகில் வியாழ குருவை யொத்த 'சுமதி' நங்கையின் குறிப்பு நோக்கி நாற்பெரும் படையுஞ் செல்ல செங்கையில பிரம்பு நீட்டி சேவகஞ் செலுத்திச் சென்றார். வடபுலக் காவல் வேந்தர்களின் புயவலி அடங்கிற்று. பொங்கிய வேந்தர் புறமிட்டோடினர். மறித்த மன்னர்கள் மண்டியிட்டனர். உம்பர் கோனும் இந்திரன் தானணிந்த தும்பை மாலை விழத் தலைவணங்கினான். வெள்ளை வாரணம், தழைகதிர் மணி, உயர் பரி (உச்சைச்சிரவம்) அனைத்துங் கைப்பற்றி அவன் தருக்கடக்கினாள்.

கயிலையை நோக்கினள் கயல்விழியாள் :

ஊழிதோறு மோங்கும் ஓங்கல், தன்னைவிட்டுச் சென்ற மலையான் மகள் வந்தாளென்று அருவி என்ற கட்புனல் சிந்தி, அந்நீரின் ஒலியினால் 'அன்னையே வா' - என்றழைத்துத் தனது வெள்ளொளியாகிய புன்முறுவலால் தழுவி எதிர்கொண்டழைத்தது. வலிய இடியேற்றையொப்ப நங்கையின் படை நாயகனின் மலையை வளைக்கவும் - திருமலைக் காவலர் யாவரும் நந்திதேவரிடம் சென்று முறையிட்டார்கள். நந்தியெம்பெருமானும் நிமலனின் கருத்தறிந்து பூதகணத்தை மதுரைப்படையோடு மோதச்செய்தான். சூலங்கள், மழுப்படை, தோமரம், நேமி, பிண்டிபாலம், வாட்படை, தண்டம், நாஞ்சில், அயிற்படை வீசி ஆரவாரத்தொடு போரிட்டனர். திங்கட்படைக்குக் கதிரோன் படையும், அங்கிப்படையடக்கத் தீம்புனல்படையும், நரசிங்கப் படைக்கெதிரா சரபப்படையும், வாயுப் படையொடுக்க அரவப் படையும் விடுத்தனர். வச்சிரவேலை நிமிர்த்து வீசி எதிரிகளைச் சாடினாள் அழல்தந்த ஆரணங்கு. பொய்யுடைய நெஞ்சில் நில்லாத் தவம்போல பூதப்படையினர் உடைந்து பின்னிட்டனர்.

படையற்று. தோள்வலியற்று, செற்றமும் இடையற்று வரும் வீரர்களைக் கண்ட நந்தி ஓடிச்சென்று உடையானிடம் இவை கூறவும் தருமச் செங்கண் விடையான் அமராடிய களம் காண வந்தான்.

* "மேவி யாகவப் பாரிடைப் பாரிட வீரரை யமராடி
ஓவி லாவலி கவர்ந்தது மன்றினி யுருத்தெவ ரெதிர்ந்தாலும்
தாவி லாவலி கவரவு மடங்கலின் றனிப்பிணு வென நிற்கும்
தேவி யார்திரு வுருவமுஞ் சேவகச் செய்கையு மெதிர்கண்டான்"

பெண்ணென நின்ற பேரழகு :

பிராட்டியும் 'ஒற்றை வார்கழற் சரணமும், பாம்பசைத்த வெம் புலித்தோலும், கொற்றவாள் மழுக் கரமும், வெண்ணீறணி கோலமும் - நூல்மார்பும், கற்றை வேணியும் - தன்னையே நோக்கிய கருணைசெய் திருநோக்கும் பெற்ற தன்வலப் பாதியை எதிரில் கண்டாள். கண்ட எல்லையில் ஒருமுலை மறைய கருத்தில் நாணமும் அச்சமும் பெருக பண்டையன்பு பெருக - மண் கிளைத்து நிற்கும் பெண்ணென நின்ற பேரழகைக் கண்ட 'சுமதி' வானொலி வாக்கை நினைவுகூர்ந்து இவரே நினது மணவாளனென்று கூறினர். கொன்றைமுடிக் குழகனும் அம்மையைப் பார்த்து 'என்று நீ மதுரையை விட்டுக் கிளம்பினையோ - அன்றுதொட்டு உனைவிடாது போந்தனம்.

"தொன்று தொட்டநான் மறையுரை வழிவரு
சோமவா ரத்தோரை
நன்று தொட்டநாண் மணஞ்செய வருதுநின்
னகர்க்குநீ யேகென்று"

அருளிச் செய்தான். தன் அன்பையும் உயிரையும் அவணிருத்தி - குன்றமன்ன தேரேறி புண்ணிய நதிகளையும் மலைகளையுங் கடந்து மன்றல் மாமதுராபுரி வந்தடைந்தாள் மங்கல நாயகி.

மாநகர்க் கீந்தார் மணம் :

கொடியிடை நாயகியின் கடிமணச் செய்தியை மாநகரெங்கும் யானைமேல் முரசேற்றி பறையறைந்து பரப்பினர்கள்.

---

* (ஆகவப்பார் : போர்க்களம் - பாரிடம் : பூதம் - பிணுமடங்கல் : பெண்சிங்கம் - சேவகம் : வீரம்)

எல்லாத் தேச மன்னர்களுக்கும் மணவோலை சென்றது. நகர மக்கள் தத்தம் வீடுகளில் வந்த வதுவை என்றே கருதி மனைகளைப் புதுக்கினார்கள். நங்கையருங்கடி காணத்துடிக்கும் கண்களோடு உள்ளமும் பெற்றவர்களாக பாலிகை, தோரணம், மங்கலதீபம் இவைகளை வரிசைகளில் வைத்தனர். மணவணி காணும் மண்டபத்தின் நடுவில் சோமசுந்தரப் பெருமானும் தடாதகைப் பிராட்டியாரும் அமர வேதாங்கம் ஆறுமே கால்களாக, பிரணவ மந்திரம் பீடமாக - வேதங்கள் முத்துவடங்களாக விளங்க நவமணி பதித்த பொற்றவிசிட்டனர்.

மணங்காண வந்த மன்னர்களும் மற்றவர்களும் தத்தமக்கு உரிய இடங்களில் பிராட்டியாரின் அருளைப் பெற்று அமர்ந்து கொண்டனர். வருகின்ற வேந்தர்கள் நானிலப் பொருள்களையும் கொணர்ந்து தேவியின் திருவடியில் காணிக்கையாக்கவே மதுரை மங்கலத் திருநகராக எழிலுற்றது இந்திராதி தேவர்களும், பதஞ்சலி அகத்தியர் போன்ற முனிவர்களும் கயிலையில் வந்துநின்று பெருமானருளைப் பெற்று மணங்காணச் செல்ல ஆயத்தங் கொண்டனர் மதியணிந்த பெருமானும் மணக்கோலங் கொள்ளச் சென்றார்.

(வளரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam,

புரசைத் திருநெறிக் கழகம், சென்னை 7. (19—8—68)

மேற்படி கழகக் குழுவினர் (63) அறுபத்துமூவர் மேற்படி நாளில் மாலை திருபுவனம் - நடுக்கம் தீர்த்தநாதர் கோயிலில் வழிபாடு நிகழ்த்திய ஞான்று மேற்படி தேவஸ்தானத்தார் உடனிருந்து மிக்க சிறப்பாக வழிபாட்டினை நிகழ்த்திவைத்தனர். ஆலயங்களில் சந்நிதிகளில் அலங்காரங்கள் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தன. சித்திரங்களும் சிற்பங்களும் கண்களுக்குச் சிறந்த விருந்து

(ஒ-ம்) க. வடிவேலாயுதன் M. A.,
தலைவர்,
தமிழ்ப்பேராசிரியர் கிறித்தவக் கல்லூரி,
சென்னை.

(ஒ-ம்) செ. சுந்தரன்,
செயலன்.

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 27, இதழ் 9, பக்கம் 418 இன் தொடர்ச்சி)

ஞானபாதம் :

शैवागमेषु मुख्यं पति पशु पाशा इति क्रमत् त्रितयम् ।
अत्र पतिश्शिव उक्तः पशवोह्यणवोऽर्थपञ्चकं पाशाः ॥

— तत्वप्रकाशिका

சைவாகமத்தில் முக்கியமாக பதி, பசு, பாசம் என முப்பொருள் கூறப்படுகிறது. அதனுள் பதி என்பது சிவன், பசு என்பது ஆன்மா, பாசம் என்பது ஆணவம் முதலிய ஐந்து என்று தத்துவப்பிரகாசிகை கூறுகிறது. இது காமிகம், பராக்யம், மிருகேந்திரம் முதலியவைகளில் கூறப்படும் முறை. பௌஷ்கராகமத்தில் பதார்த்தம் ஆறு என்றும், சுவாம்புவத்தில் ஏழுபதார்த்தம் என்றும் கூறப்படுகிறது. அவை யாவும் மூன்றுக்குள் அடக்கப்படுகிறது.

பதிலக்ஷணமாவது :

மெய்யெழுத்துக்களில் உயிரெழுத்துப்போல் எல்லா ஆன்மாக்களிடத்தும் நிறைந்தவராயும், முதல் நடு இறுதி இல்லாதவராயும், ஸ்தூல சூக்ஷ்ம சூன்ய ரூபம் இல்லாதவராயும், குணம் குறியற்றவராயும், ஒன்ருய், அசலமாய், அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சோதியாய், பஞ்சகிருத்யத்திற்கு அதீதப்பட்டவராய், நிர்மலவடிவாய், லயம், போகம் அதிகாரம் என்ற முறையுடையவராய் அனுதி மலரஹிதராய், வாக்கு மனோதீத கோசரராய் விளங்கும் ஸ்வரூப லக்ஷணத்துடனும் - சிருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம் அநுக்கிரஹம், ஆகிய பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவதற்குரிய தடஸ்த லக்ஷணத்துடனும் பதியாகிய இறைவன் விளங்குகின்ருர்.

பதியாகிய சிவத்தை அக்னிக்கு உஷ்ணம்போலப் பிரிவற்றிருக்கும் சத்தியானது நித்தமாய் ஒன்ருய் இச்சா ஞானக் கிரியா ரூபமாய் இருக்கும். இந்த சத்தி காரிய பேதத்தினுல் பராசக்தி முதலிய அநேக பேதப்படும். சச்தியுடைய பேதத்தினுலே சிவனும சத்தர் உத்யுத்தர் பிரவிருத்தர் என மூவகையாய்ப் பேதப்படுவர். இவ்வாறு,

शक्तोद्युक्त प्रवृत्तश्च कर्ता त्रिविध इष्यते ।
शक्तेः प्रवृत्तिभेदेन भेदस्तस्य उपचारतः ॥

— मृगेन्द्रागमम्

என்று மிருகேந்திராகமம் கூறுகிறது. சத்தர் என்பவர் காரியத்தைப் பண்ண உத்தியோகியாகாமலிருக்கிற சக்தி மாத்திரமாயிருப்பவர். (தம் சக்தியை வெளிப் பரப்பாமலிருப்பவர் என்று கருத்து) ஆகையால் நிஷ்களராய் இருப்பவர். இவருக்கு ஞானமாத்திரமே திருமேனி, இவருக்த லயர் என்றும் சத்தர் என்றும் பெயர். இவர் சிவன் என அழைக்கப்படுவார்.

உத்யுக்தர் என்பவர் காரியம் செய்ய உத்யோகிக்கிறை சத்தியுடையவர். காரியம் பண்ண உத்யோகிக்கிறபொழுது ஞானக் கிரியா சத்திகள் ஒப்பில் உண்டானவர். பராசத்தி, ஆதிசத்தி இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி என்னும் ஐந்து சத்திகள் சுத்த மாயையிலே பதிந்தபோது உண்டாகிய ஈசானம் முதலிய பஞ்சப்பிரமங்களையே திருமேனியாக உடையவர். பாசகலைகளுடன் கூடியிருத்தலால் சகளமும், சத்தி கலைகளுடன் கூடியிருத்தலால் நிஷ்களமும் உடைமையால் சகள நிஷ்களராம். இவருக்குச் சதாசிவர் என்றும் போகர் என்றும் பெயர்.

ப்ரவிருத்தர் என்பவர், காரியங்களைச் செய்யத் தொடங்கிய சத்தியையுடையவர். காரியம் பண்ணுகிற வேளையில் கிரியை அதிகமாக வேண்டுமாதலால் ஞானசத்தி கொஞ்சமும் கிரியா சத்தி அதிகமுமாக உடையவர். இவர் பாச கலைகளுடனே கூடியிருக்கையால் சகளராம். இவருக்கு மகேசுரர் என்றும் அதிகாரர் என்றும் பெயர். இப்பதியானவர் நிஷ்களத்தில்

சிவம், சக்தி, நாதம், விந்து எனவும், சகள நிஷ்களத்தில் சதா சிவன் என்றும், சகளத்தில் மஹேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிர்மா எனவும் ஒன்பது பேதப்படுவார்.

இவர்களுக்குரிய சத்திகளாவன :

சிவத்திற்குச்சத்தியும், நாதத்திற்குவிந்துவும், சதாசிவருக்கு மனோன்மனியும், மஹேஸ்வரருக்கு மஹேசையும், ருத்ரருக்கு உமையும், விஷ்ணுவுக்கு லக்ஷ்மியும் பிர்மாவுக்கு சரஸ்வதியும் என்று சக்திபேதம் ஐவகையாகின்றன. காரிய பேதங்களினாலே சக்தியும் சிவமும் பேதமாயின. இவர்களில் சிவத்திற்கு சத்தியும், நாதத்திற்கு விந்துவும் இவ்விரண்டும் ஒழிந்த மூர்த்திகள் ஐவருக்கும் மனோன்மனி என்றும், மகேசை என்றும் உமை என்றும் லக்ஷமி என்றும் சரஸ்வதி என்றும் சத்தி பேதம் ஐவகைப்படும், காரிய பேதத்தினாலே சத்தி சிவங்களும் பேதமாயின. பதிக்கு இந்தச் சிற்சத்தியே தேஹம், கரணம், இடம், எல்லாம் என்று அறிக. சுத்தாத்வாவிற்குச் சிவன் கர்த்தாவாகிறான், அசுத்தாத்வாவிற்கு அநந்தேசுரர் கர்த்தாவாகிறார்.

கர்த்ருத்வம் என்பது ஸங்கல்பமாத்ரகர்த்ருத்வம், கரண கர்த்ருத்வம் என்று இரண்டுவிதம், கரணகர்த்ருத்வம் குயவன் முதலானவர்களிடம் காணப்படுகிறது. சங்கல்ப மாத்திர கர்த்திருத்வம் சிவனுக்கே உரியது.

शिवसङ्कल्पमात्रेणबिन्दुक्षोभकरस्तथा ।

என்று காரணாகமம் அருளுகின்றது. சிவசங்கல்ப மாத்திரத்தில் பிந்துவிலிருந்து எல்லாக் கலைகளும் தத்துவ புவன போகங்களும் - வர்ண - பத - மந்திரங்களும் உண்டாகின்றன. சங்கல்ப மாத்ரகர்த்ருத்வம் என்பதும் இரண்டுவிதம். அதாவது மனோவ்யாபார கர்த்ருத்வம் சன்னிதிமாத்ரகர்த்ருத்வம் என்று கூறப்படும். மனோவியாபார கர்த்ருத்வம் பிரமன் முதலானவர்களிடத்தில் உள்ளது. சிவனிடத்தில் சந்நிதி மாத்ரகர்த்ருத்வம் உள்ளது.

எவ்வாறு சூரியன் நிர்விகாரியாய் இருந்து தன் சந்நிதானத்தில் தாமரைமொட்டு அலரவும், ஆம்பல் குவியவும்,

சேறு இறுகவும், வெண்ணெய் இளகவும் பண்ணுமாறுபோல, கர்த்தா காரியத்தில் உன்முகமாய் இருக்கிற சத்தியுடனே கூடியிருப்பவர் ஆதலால் அவர் சந்நிதி மாத்திரத்திலே சிருஷ்டியாதிகளைப் பண்ணுவர் என்க.

अन्यस्सन् व्याप्तितोऽनन्यः कर्त्ता कर्मानुसारतः ।
करोति संसृतिं पुंसा माज्ञया समवेतया ॥

— शिवज्ञानबोधम्

மேற்கூறிய சிவபெருமான் (பொருட்டன்மையால் உயிர்களுக்கு) வேருயினும் வியாபித்திருத்தலால் (கண்ணொளியும் ஆன்மபோதமும் போல) உடனுமாய் (நின்று) தன்னைவிட்டு நீங்காத ஆணையெனப்படும் சத்தியைக்கொண்டு ஆன்மாக்களுக்கு அவற்றின் இருவினைகளுக்கிடாக இறத்தல் பிறத்தலைச் செய்கிறுன் என்று சிவஞானபோதம் அறிவிக்கிறது.

பசுக்கள் : (பசு லக்ஷணம்)

ब्रह्माद्यास्थावरान्ताश्च देवदेवस्य शूलिनः ।
पशवः परिकीर्त्यन्ते संसारवशवर्त्तिनः ॥

பிரமன் முதல் ஸ்தாவரம் வரையிலுள்ள யாவும் பசுக்கள் ஆகும். அவை தேஹம் இந்திரியம் அந்தக்கரணம் முதலியவற்றின் வேருய், அனுதியே மலத்தோடு கூடியதாய் எண்ணிறந்ததாய், முற்றறிவு முற்றுத்தொழிலில்லாததாய், கன்மங்களை ஈட்டுவனவாய், தாம் ஈட்டிய கன்மங்களைத்தாமே புசிப்பனவாய் நித்யமாய் வியாபகமாய் தேஹமுடையனவாய் மலத்தினுல் தடைப்பட்ட ஞானரூபிகளாய் விக்ஞானகலர், ரபளயாகலர், ஸகலர் என்னும் பெயருடையவைகளாய் ஈச்வரனுலே ஏவப்பட்டவைகளாய் ஸ்வாதீனமற்றவைகளாய் சிற்றறிவுள்ளனவாய் விளங்குவனவாம்.

(தொடரும்)

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதர் பதிகம்

அழகியசுத்தம்

புலவர். ப. சிவக்கொழுந்து உடையார்

இயற்றியது

விநாயகர் துதி

வெண்பா

பொன்னிருக்கு நல்லதிருப் புள்ளிருக்கு வேளூரில்
பன்னுதைய லுயகியாம் பாவையொடு — மன்னும்
வயித்திய நாதன் மலரடியைப் போற்றக்
கயத்தின் முகக்கடவுள் காப்பு.

விருத்தம்

1, பொங்கு மரவும் புலியதளும்
புனைந்த வெங்கள் புண்ணியனே
மங்கை தைய லுயகியுண்
மகிழு மணியே மறைப்பொருளே
எங்கு நிறைந்த பரஞ்சுடரே
யேழை யெனக்கை விடாதருளாய்
சங்கு முழங்கும் வயல்வேளூர்
தன்னில் வளர்வைத் தீசுரனே.

2. ஒது மிராம விலக்குமண
ருள்ளன் போடுன் னகரடைந்துன்
பாத பதுமம் வழிபட்டுப்
பயன்மிக் குற்று ரெனவறிந்தும்
மாதர் மயலிற் பட்டுழன்று
வருத்தப் பட்டேன் மதிகெட்டேன்
பூத லத்தென் பிழைகளெலாம்
பொறுத்தாண் டருள்வைத் தீசுரனே.

இப்பதிகம், வைத்தீஸ்வரன்கோயில் வித்துவான். திரு. மு. முருகையா தேசிகர் அவர்களிடமிருந்த கையெழுத்துப் பிரதியின்படி வெளியிடலாயிற்று.

3, செய்ய பொழில்கள் சேண்மணக்குந்
திருப்புள் ளிருக்கு வேளூரில்
தையலோடு மெழுந்தருளிச்
சாற்று முயிர்க டமக்கெல்லாம்
வெய்ய பிணியும் பவப்பிணியும்
வீட்டி நின்றாய் வினைதீர்த்தாய்
வைய நினக்கென் கைம்மாறு
வழங்கு முரைவைத் தீசுரனே.

4. வெள்ளே றுடையுன் னடிக்கமலம்
விரும்பித் தேடிக் காணுமற்
புள்ளே றுடையா னலமந்து
போற்ற வருள்செய் புண்ணியனே
கொள்ளேன் பிறரைத் தெய்வமெனக்
கோதை யொருபாற் கூறுடையாய்
தள்ளே லெனை நீ யாட்கொள்ளத்
தருண மிதுவைத் தீசுரனே.

5, மலரோன் சிரத்தைத் துணித்திட்டாய்
மகனைத் தொண்டன் கறிசமைத்தே
யுலகிற் படைக்கச் செய்தவனுக்
குயர்வாழ் வளித்தாய் பாலனுக்காக்
குலவு முயிர்க டமைக்கவருங்
கொடிய சண்டன் றனையுதைத்தாய்
மலநோ யகற்றி யெளியேனை
வந்தாண் டருள்வைத் தீசுரனே.

6. வேளுங் களிறும் புடைவிளங்க
விமலி யோடு வேளூரில்
நாளு மகிழ்ந்து நலமருள்வோய்
நாய்க்குங் கடைப்பட் டேனெனது
கோளுங் குறையுந் திருவுளத்திற்
கொள்ளா தடக்கி வினை நீக்கி
ஆளுங் கடமை நின்னுடைய
தன்றோ வருள்வைத் தீசுரனே.

7. அத்தி யுரியைப் போர்த்தவனே
யனல்மான் சூல மத்தத்தில்
வைத்தா யுமையா ளிடப்பாகம்
வயங்க மகிழு மணிக்குன்றே

முத்தி யளிக்கும் வேளூரில்
முத்துக் குமரன் புடைவிளங்கப்
பத்தர்க் கருள்வாய் நீகடைக்கண்
பார்த்தாண் டருள்வைத் தீசுரனே.

8. நாகர் பதமு நான்வேண்டேன்
ஞாலப் புகழு மிகவேண்டேன்
பாக முடைய பெண்ணேய்நின்
பாத கமலத் துணையன்றித்
தேகம் விழுமுன் சுற்றத்தார்
சேர்த்திங் கழுமுன் திருவருள்செய்
பூக முடிமேற் புயறவழும்
புள்ளூர் வளர்வைத் தீசுரனே.

9. செக்கர் மேனித் தெய்வதமே
சிவந்த சடையின் மதிநதியுங்
கொக்கி னிறகு மணிந்தவனே
கோதை யொருபாற் கூறுடையாய்
மீக்க புகழ்சேர் வேளூரின்
மேவி யுலகர் தமக்கெல்லாம்
தக்க மருந்து தருவாயென்
றனையாண் டருள்வைத் தீசுரனே.

10. பூத மைந்தாய் மறைநான்காய்ப்
பொருந்து மூர்த்தி மூன்ருகி
ஓதுஞ் சுடர்க ளிரண்டாகி
யுயர்வீ டொன்ருய் நின்ருய்நீ
மாத வர்க்கு மறிவரிய
மணியே நின்னை வழுத்துதற்குப்
பேதை யானே வல்லவனென்
பிணிதீர்த் தருள்வைத் தீசுரனே.

ஸ்ரீ வைத்தியநாதர் பதிகம்

முற்றிற்று

ஸ்ரீ வைத்தியநாதர் பிரார்த்தனைத் தோத்திரங்கள்

வெண்பா

வேளூ ரிறைவரையும் வீடருளுந் தையலையுந்
தாளுன் வலியகற்றத் தான்தொழுதேன் — ஞாலத்தில்
வந்த பிணியகற்றி வாழ்விக்கு மற்றிவர்போல்
எந்தஉல கத்து மில்லை.

அறுசீரடி விருத்தம்

வரதமுட னபயமுமா மலர்க்கரமுஞ்
சூலமொடு மழுவு மானும்
புரமெரித்த புன்னகையு நுதற்கண்ணு
மதிநதியும் புலியின் றோலும்
கருமிடறும் வெண்ணீறுங் கூற்றுதைத்த
கழற்காலுங் காமக் கோட்டி
மருவுமிடப் பாகமுமென் மனத்திருக்கப்
பயமேது வைய மீதே.

மிருத்துவினி லைங்குணமாய் மேகநீர்
நான்காகி மிகுதீ மூன்றாய்
நிருத்தமிடு காலிரண்டாய் நீள்விசும்பி
லொன்றாகி நிற்கு மூர்த்தி
யொருத்தருக்கும் புலப்படா னுயர்தபோ
தனர்காண் பானுவமை யில்லான்
பெருத்தமதிற் புள்ளிருக்கு வேளூரைப்
போற்றுகிலேன் பேய னானே.

வேறு

வேயிற் குழலோன் தங்கைஎன்றும்
விரும்பிப் பணியுந் தெய்வீகத்
தீயிற் பிறந்த த்ரௌபதைதன்
திண்டோ ளணையுஞ் சிலைவிசயன்
வாயில் வாராப் பிழைகள்சொல
வாழ்த்த லென்றே மகிழ்ந்தவரைச்
சேயிற் பெரியோ னெனஎண்ணிச்
சிறக்க வளித்தீர் பாசுபதம்.

கலி விருத்தம்

வாழி நான்மறை வையகம் வாழியே
வாழி தேவர்கள் ஐம்புலன் வாழியே
வாழி தையல் மணாளனும் வாழியே
வாழி யித்துதி வாசித்தோர் வாழியே.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை*

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling

[தோடக்கம்]

அருளே உருவாம் பரம்பொருளின்
அடிகள் போற்றி, அவைத்தலைவர்
தெருளார் கவிஞர் திருலோக
சீதாராமர் திறம் வணங்கி,
மருளைப் போக்கும் ஆசான்மார்
மாணவர்க்கென் றன் கைகூப்பி
அருளின் நிலையைக் கவிநெறியால்
அன்பாற் பாட முந்துகிறேன் க

கீழ்ப்படியில் இருப்போனைக் கயமை யென்னும்
கேட்டடியில் கிடப்போனைப் பொய்மைத்திமைக்
காழ்ப்படியில் நிற்போனைக் கையெடுத்தே
கைப்படியில் இல்லாமல் கடவுளாக
ஏழ்ப்படியில் ஏற்றிவைத்துத் தொழுதுநின்றே
இப்படியில் செய்திடுவர் உலகமாந்தர் ;
தாழ்ப்படியில் இருப்போர்க்கும் பொருளிருந்தால்
தப்படியில் தனிச்சிறப்புக் கூடுமன்றோ ! 1

பொருளற்றார் அற்றவரே ; புவியி னுள்ளே
பொருளாக மதித்தெவரும் புகழ மாட்டார் ;
பொருளிருந்தால், அறிவில்லான் தனையும் இங்கே
புத்தியிலே சிறந்தவனாய்ப் போற்றல் செய்வார் ;
பொருளிருந்தால் நோயுடையான் தனையும் இங்கே
பொருவில்லா வீரனென்று புகன்று நிற்பார் ;
பொருளே ! நீ சிறப்புடையாய் ; ஆற்றல்கொண்டாய் !
பூமியிலே எவர்நினக்கிங் கிணை யாவாரே ! 2

---

* 26—11—67ல் தஞ்சை மன்னர் சரபோசிக் கலைக் கல்லூரியில், கவியரங்கேறிப் பாடிய பாடல்கள்.

காசில்லா மாந்தர்நடைப் பிணமாம்; அன்றிக்
கணித்திடிலோ செல்லாத காசாம்; தூய
மாசில்லா மாணிக்க மலையாய்; ஆற்றல்
மண்டிடுமோர் பேரறிவுப் பிழம்பாய் வாழ்ந்தும்
காசில்லா ரேல்அவரைக் கரிக்கும் வையம்;
கண்ணெடுத்தும் பாராதே ஒதுங்கிச் செல்லும்!
காசே! நீ வையத்துக் கண்ணூர் தெய்வம்!
கவிபலவும் பாடினும்நீ கைக்கெட் டாயே! 3

இவ்வுலகம் பொருளுடையார்க் கின்ப வீடு;
இனியரிலாப் பொழியும்சீர்ப் பூவின் காடு;
ஒவ்வாத உலகியலை உரைக்கப் போமோ?
ஒளிபடைத்த அருளெனிலோ கேள்வியாய
அவ்வுலகுக் கச்சாரம்; வினைவிளைந்தே
அதன்பயனைத் துய்க்கின்ற நேரந்தன்னில்,
செவ்வியன கண்டுவக்கும் உயர்வுசேர்ந்த
சேயஉலகிற்சேர்க்கும் சிறப்பாம் ஏணி! 4

அன்பென்னும் நற்றாயின் மூத்தபிள்ளை;
அணைத்தந்தப் பெற்றமடி தவழ்ந்தகிள்ளை;
துன்பென்னும் நிழல்படியாத் தூயநெஞ்சத்
தொட்டிலிலே கண்வளர்ந்த செங்கரும்பு;
முன்பென்னும் பண்புகளின் எல்லைக் கெல்லாம்
முன்புதித்த அன்பினுக்கு முறைப் பிறந்த
தென்புள்ள அருள்பொருளாம் செவிலியாலே
தினமிந்த மன்பதையில் நிலைக்கும் அன்றோ? 5

கட்டியனைத் திதழ்ப்பூவில் தேனை யுண்டே
கள்வெறியில் தடுமாறும் காதற் கேள்வன்,
சுட்டியுடை உச்சியிலே முகத்தை வைத்துச்
சுகந்தழுவி யின்பூற்றும் மழலைப் பூந்தேன்
சுட்டியுரைத் திடுந்தந்தை அன்னை யென்ற
சூழலிலே, தொடர்புடையா ரிடத்தே ஓங்கி
அட்டியிலாப் பெருங்குணத்தைப் புலவர் எல்லாம்,
அன்பென்று சொல்வார்கள்; அன்பே இன்பம்! 6

மன்பதையின் துயர்கண்டால், உலக மாந்தர்
மாணெறியில் தவறுகின்ற செயலைக் கண்டால்,
துன்பமுறும் உயிர்கண்டால், வறுமை தன்னில்
துவளுகின்ற தோழரினங் கண்டால்; இங்கே

என்புரிவோம் மறுவேளை உணவுக் கென்றே
ஏங்குகின்ற இரவலரைக் கண்டால், நெஞ்சில்
புன்கண்மை கொண்டுலகிற் கண்ணீர் வீழ்க்கும்
பொலிவுடையோர் எவர்அவரே அருளை ஆள்வார்! 7

சாலையிலே கல்லடுக்கி, அடுப்பா மென்றே
சலிப்போடே கருதியதில் உடைந்த பானை
நாலைந்தை ஏற்றியதில் அரிசி யென்ற
நற்பொருளைச் சிறிதிட்டுப் பொங்கி வைத்து
நாலைந்தை அமர்த்தியிரு கைக் குவிக்க
நலிந்தமுகத் தோடங்கே உண்ணு விக்க,
மேலைநாள் அவரென்ன பாவம் செய்தார்?
மேலோரே! சிந்திப்பீர்; நிலைமை நன்று? 8

இருக்க இடம் இல்லாமல் சாலையே,தம்
இல்லமென ஓரத்தே தூளி கட்டி
விரிக்கஒரு பாயின்றிக் குப்பை மேடாம்
வெறுநிலத்தே கையணையே தலைக்குக் கொண்டு
தரித்திரத்தின் படப்பிடிப்பாய், வறுமை யென்ற
தனியவலச் சித்திரமாய், நெஞ்சழிந்தே
இருக்கின்ற நிலைகண்டே இதயம் நொந்தே
எத்தனைபேர் கண்ணீரை வடிக்கின்றோம் நாம்? 9

குடலிடையே தினவெடுக்க வயிற்றுக் கேதும்
கொடுப்பாரோ மாட்டாரோ என்றிரந்தே
திடலிடையும் மனைப்புறத்தும் முகத்தே வாடித்
திரிகின்ற பலமாந்தர் மனையகத்தே
மிடலுடனே நாயினொடும் எச்சிற் காக
மிண்டுகின்ற போராட்டச் செயலைக் கண்டும்
கடலனைய கண்ணீரை வடிக்கின்றோமா?
கனிவுண்டோ இதயத்தில் கூறீர் மன்றீர். 10

செய்திதரும் தாள்பிரித்தால், உணவில் லாமல்
செத்தவரைப் பற்றியபல் குறிப்பைக் காண்போம்.
மெய்யாகத் தனியொருவர் வயிற்றுக் கின்றி
மேவிடுவர் விண்ணென்றால், நாட்டின் மானம்
உய்திபெற வழியுண்டோ? நாட்டில் வாழும்
ஒவ்வொருவர் தனிவாழ்வும் சிறந்தா லன்றோ
ஐயமின்றிச் சமுதாயம் அனைத்தும் வாழும்?
அதைநினைந்து வருந்துகின்றோர் எத்தனைபேர்? 11

துயில்நீங்கி எழுமுன்னர்த் தேநீர் கொள்வோம்;
துணைவி தரும் உணவினையே ஆர உண்போம்;
பயில்கின்ற செய்தித்தாள் பலவும் உண்டு,
பகட்டாக உடையுடுத்தி, அலுவல் ஏற்க
வெயிலுக்குக் குடைபிடித்து விரைந்து செல்வோம்;
வீட்டுக்கு மீளுவதும் உணவு கொண்டு
துயிலப்போவதும் இவைதாம் தொழிலாக் கொள்வோம்;
துளியேனும் நாட்டுநலம் சிந்தித் தோமா? 12

விலைவாசி ஏறிடற்குக் காரணம் என்?
வீட்டுவரி உயருதற்கு ஏது யாது?
கலைஞர்மனம் கெடுதற்கும் காண்போர் தங்கள்
கருத்தினைப்பால் உணர்ச்சியிலே வீழ்ப்பதற்கும்
நிலையான அடிப்படைதான் யாதாம்! இங்கே
நெடுங்கால மொழிவளமை காப்பதற்கும்
வலைவிரிப்போர வழிதடுத்து மொழியைக் காக்கும்
வகையென்ன என்றெல்லாம் சிந்தித்தோமா? 13

விண்ணெட்டும் திருக்கோயில் பலவும் உண்டு;
விழைந்துதிரு முழுக்காடத் தீர்த்தம் உண்டு;
கண்ணெட்டும் படிக்கின்றிப் பரந்திருக்கும்
கடல்போலும் பெருஞ்செல்வர் பலரும் உள்ளார்;
புண்ணெட்டும் ஈப்போலே சமுதாயத்தின்
புண்ணதனைக் கோலிடுவார் போலே சில்லோர்
எண்ணெட்டும் படத் தீமை புரிந்திருப்பார்;
இங்கிலையேன் என்றணுவும் எண்ணினோமா? 14

அரசியலோ கட்சி மனம் அரவணைக்கும்;
அறிவியலோ ஒதுங்கிநின்றே ஆய்வு காணும்;
பரசுகின்ற பெரும்புலவர் தாமோ தம்மில்
பரம்பொருளைப் பற்றிப்பாழ் விவாதம் பேசி
உரனுடைய உளமின்றித் தமது வாழ்வை;
உவகைநெறி நோக்கியே செலுத்தல் செய்வார்;
அறம்சான்ற அருளியல்தான் தழைப்பதெங்கே?
அன்றன்றோ அவ்வுலக நாட்டம் மேவும்! 15

(தொடரும்)

சந்திரன்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 27, இதழ் 9, பக்கம் 414 இன் தொடர்ச்சி)

ஆகமத்தில்

சித்ரஸிம்ஹாஸநாஸீன: குந்தஸ்படிக ஸந்நிப:
ப்ரபா மண்டல ஸம்யுக்த: த்விபாஹுச்ச த்விநேத்ரக:
ஆஸீநோ வா ஸ்திதோ வாபி குமுத ப்ரஜ்வலத் கர:
தஸ்ய தக்ஷிண பாகேது ரோஹிணீ த்விபுஜான்விதா.

இரண்டு கண் இரண்டு கைகளுடன் பிரபாமண்டலமுடைய வராய் சிம்மாஸனத்தில் உட்கார்ந்த நிலையிலோ அல்லது நின்ற நிலையிலோ அல்லி மலரால் விளங்கும் கையுடையவராய் இருப்பார் அவருடைய வலது பாகத்தில் இரண்டு கைகளுடன் ரோஹிணீதேவி யிருப்பாள் என்று பூர்வகாரண ஆகமம் கூறும்.

அம்சுமத் பேதாகமத்தில் மார்பில் சுவர்ணமய யக்ஞோப வீதம் அதிகமாகக் கூறப்படுகிறது.

சில்பரத்னத்தில் பத்துக் குதிரை பூட்டிய தேரில் வீற்றிருப்ப தாகவும் வலது கையில் கதையும் இடது கையில் வரதமுத்திரை யும் சொல்லப்படுகிறது.

மத்ஸபுராணமோ சில்பரத்னத்தை அனுசரித்துக் கூறி வலதுபுறம் காந்திதேவியும் இடதுபக்கம் சோபா என்ற தேவி யும் இருப்பதாகவும் இடது பக்கத்தில் சிங்கக் கொடி இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

உத்தர காரணமோ வெள்ளை அல்லி ஏந்திய இரு கைகள், இரண்டு கண், கரண்ட மகுடம், பிரபா மண்டலம் இவற்றை யுடையவராய் வெண்ணிறமாய் பத்மபீடத்தின்மேலிருப்பதாகக் கூறும்.

சிவபெருமானுடைய எட்டு மூர்த்தங்களில் சந்திரனும் ஒன்று என்பது "பூதார்க்க சந்த்ர யஜ்வானோ மூர்த்தயோஷ்டௌ ப்ரகீர்த்திதா" என்றவாக்யத்தால் புலப்படும். சிவ பெருமானுக்கு அணி என்றும் கூறப்படும். சிவபெருமானுடைய கண் என்று சொல்லப்படுவதுபோலவே "வாஸுதேவஸ்ய நயநம்" (நாராயணனுடைய கண்) என்றும் ஸ்தோத்திரங்களில் கூறப்படும்.

அதர்வவேதம் சந்த்ரமா நக்ஷத்ராணுமதிபதி: (5-24-10) என்று கூறும். அதனல் நிகண்டுக்களில் நக்ஷத்ரேசன், உடுபணு என்பன போன்ற "நக்ஷத்திரங்களுக்கு அதிபதி' என்ற பொருளில் பல பெயர்கள் சொல்லப்படுகின்றன.

சத்ருநாசத்தைக் கருதிச் சொல்லப்படும் (அதர்வ 2-22) சூக்தம் முழுவதும் "சந்த்ர யத்தே" என்று ஆரம்பமுடையது. ரிக்வேதம் ஒன்பதாம் மண்டலத்திலுள்ள ரிக்குகள் பெரும்பாலும் சந்திரனையே தேவதையாக உடையன.

மனிதன் மரிக்கும் காலத்தில் ஜீவனிடத்திலுள்ள இந்திரியங்கள் பிராணன் முதலியன தேவதைகளிடத்தில் பயமடைகின்றன என்று கூறுமிடத்தில் "மனது சந்திரனிடத்தில்" லயமடைவதாகக் கூறப்படுகிறது.

மத்ஸ்ய புராணம் 23ஆவது அத்தியாயம், பத்மபுராணம் முதல்பாகம் 12ஆவது அத்தியாயம், 82ஆவது அத்தியாயம், சிவ மஹாபுராணம் ஞானசங்கிதை 45 ஆவது அத்தியாயம் இவைகளில் சந்திரனைப்பற்றியும், ஸோமவார விரதத்தின் மகிமை, தக்ஷன் பெண்களை மணத்தல், ரோகமடைதல் முதலியன கூறப்படுகின்றன மேலும் பாகவதம் ஐந்தாம் ஸ்கந்தத்தில் 22 முதல் 25 அத்தியாயம் முடியவும் ஆரும் ஸ்கந்தத்தில் முதல் ஆறு அத்தியாயங்களிலும் சந்திரனைப் பற்றிய வரலாறுகள் உள்ளன.

திருப்பழனத்திற்கு சமீபத்திலுள்ள திங்களூரில் தலையாய அன்புடைமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அப்பூதி நாயனுருடைய புதல்வன் அரவம் தீண்டி மரித்தபொழுது திருப்பதிகம் பாடி இறைவனருளால் திருநாவுக்கரசு சுவாமிகள் உயிருடன் மீள எழச்செய்தார். சந்திரன் இறைவனை வழிபட்டமையால் அவ்வூர் திங்களூர் எனப் பெயர்பெற்றது. அவ்வூரில் பங்குனி மாத பௌர்ணமி, அதற்கு முந்திய தினம், மறுதினம் ஆகிய மூன்று நாட்களிலும் திங்களுடைய கதிர்கள் சுவாமியின்மேல் சந்திரன் உதிக்கும்போது விழுகின்றன. இம் மாதிரியே புரட்டாசி மாதமும் மூன்று நாட்களில் சந்திரனால் சிவபெருமானுக்குப் பூசை நடைபெறுகின்றது.

இனிமை எனப் பொருள்தரும் தீம் என்னும் சொல் குறுகித் திம் என நின்று, அமிழ்து எனப்பொருள்படும் கள் என்பதுடன் கூடித் திங்கள் என ஆயிற்று என்று திங்கள் என்னும் பதத்திற்குப் பொருள் விளக்கம் கூறுகிருர் மறைமலையடிகள்.

நிசாகர, ரஜனீகர, க்ஷபாகர என்பனபோன்ற சொற்கள் இரவை உண்டாக்குபவன் என்றும் பொருள்படுவன. அதே போல் இரவோன், அலவன், அல்லோன் என்ற சொற்கள் தமிழிலும் சொல்லப்படுகின்றன.

கலைகளையுடையவன் ஆனதுபற்றி கலாவான், கலாநிதி கலாதரன் கலையோன் என்ற பெயர்களும், குளிர்ந்த கிரணங்கள் உடைமை பற்றி சீதகர, ஹிமாம்சு, தண்கதிர் முதலிய பெயர்களும், களங்கம் சந்திரனில் இருப்பதுபற்றி களங்கன், குரங்கி, முயற்கூடு மிருகாங்க, சசாங்க, சசீ, சசதர முதலிய பதங்களும் சந்திரனுக்கு பெயராகக் கூறப்படுகின்றன. சந்திரன் அந்தணர்களுக்குஅரசன்ஆனதுபற்றித்விஜராஜ என்றும் கூறப்படுகிருன். சந்திரன் அந்தணர்களுக்கு என்பதை அரசன் "ஸோமோஸ்மாகம் ப்ராஹ்மணுனும் ராஜா" என்று வேதம் கூறுகிறது.

சந்திரனில் உள்ள களங்கத்தை மான் என்றும், முயல் என்றும் கூறுவர், களங்கத்தைக் கண்ட கவிகள், அதை விஷயமாகக் கொண்டு பலவிதமாக தற்குறிப்பேற்ற அணிகளைப் புனைந்துள்ளனர், சில நாட்டார் தளங்கத்தை நண்டு, கிழவி எனவும் கூறுகின்றனர்.

சூரியனை முதலாகக்கொண்ட மனுவின் வம்சம் சூரிய வம்சம் என்று சொல்லப்படுவதுபோல சந்திரனை முதலாகக் கொண்டது சந்திர வம்சம் எனப்படும். சந்திரன் தேவகுருவான பிரகஸ்பதியிடம் குருகுல வாசம் செய்தான். குருபத்னியான தாரையுடன் கூடா ஒழுக்கம் கொண்டு புதனைப் புதல்வனுக அடைந்தான். வைவஸ்வத மனுவின் குமரி இளை என்பவள் வைவஸ்வத மனுவின் வேண்டுகோளுக்கு இரங்கிய வசிஷ்ட முனிவரால் ஸுத்யும்னன் என்ற அரசனுனன், அவன் பரிவாரங்களுடன் குமாரவனம் சென்று மீண்டும் பெண்ணுய் சந்திரகுமாரனுன புதனுடன் சேர்ந்து புரூரவசுவைப் பெற்ருன். புரூரவசு முதற்கொண்டு சந்திர வம்சம் தொடங்குகிறது. இந்த வம்சத்திலே தான் பாண்டவர்கள் தோன்றினர்.

மரித்தவர் மறுஉலகம் செல்ல தூமாதி மார்க்கம் என்றும், அர்ச்சிராதி மார்க்கம் என்றும் இரண்டு வழிகள் கூறப்படுகின்றன. அவற்றில் தூமாதி மார்க்கத்திலுள்ளவன் சந்திரன். உத்தராயணத்திலிறந்தவர் அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்வர். தக்ஷிணுயனம், கிருஷ்ணபக்ஷம் இரவு முதலியவற்றில் உடலி

லிருந்து நீங்கிய ஜீவன் தூமாதி மார்க்கத்தில் செல்லும். அவ்வழியில் சந்திரன் உள்ளான்.

தூமோ ராத்ரிஸ் ததா க்ருஷ்ணஷ் ஷண்மாஸா தக்ஷிணாயனம் I
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர் யோகீப்ராப்ய நிவர்த்ததே.

(பகவத்கீதை அத். 8, சுலோ. 25)

இதுமுதலான கீதாவாக்யங்களிலும், ஆதிவாஹிகஸ்தல்லிங்காத்' என்பது முதலான பிர்ம சூத்திரங்களிலும் அவற்றின் உரைகளிலும் இவ்விரு மார்க்கங்களும் விரித்துக் கூறப்படுகின்றன.

மேல்நாட்டார்

கையில் வெள்ளிக்காசு இல்லாமல் பிறைச்சந்திரனைக் காணலாகாது. அமாவாசையன்று கையிலுள்ள பணத்தை எண்ணினால் சந்திரன் அன்றுமுதல் வளர்ந்து பெரியதாக ஆவது போலவே தம்முடைய செல்வமும் பெருகும் என அடிப்படை அளவில்லாக் கொள்கைகள் சிலவுள்ளன. பூரண சந்திரனை உற்று நோக்குவதால் மூளைக்கோளாறு முதலியன ஏற்படும் என்று எண்ணுகிறவர்களும் உண்டு.

விக்ஞானிகள்

வேகமாகச் சுழன்றுகொண்டிருந்த மேகம்போன்ற தோற்றமுடைய நெபுலா (Nebula)விலிருந்து தோன்றிய கிரஹங்களில் ஒன்று என்று 1900ஆம் ஆண்டு வரையில் அறிவாளிகள் கருதினர் சூரியனுக்கு ஒருகாலத்தில் அருகில் சென்ற ஒரு நக்ஷத்திரத்தின் மிக அதிகமான கவர்ச்சியினால் சூரியனிலிருந்து சடப்பொருள் ஒருபகுதி இழுக்கப்பட்டது. அப்பொருள் ஆங்காங்கு கோளங்களாக குளிர்ந்து இறுகிவிட்டது. அவற்றில் சந்திரன் ஒன்று என்று சிலர்.

சூரியனிடமிருந்து பிரிந்து பூமி உண்டானபோது அது தீயிலிட்ட மெழுகுபோல் இருந்தது. அது தன்னைத் தானே சுற்றிக்கொண்ட கடுமையான வேகத்தால் மெல்ல இரண்டு பாகங்களாகி ஒன்று பூமி எனவும் மற்றொன்று சந்திரன் எனவும் ஜீ. எச். டார்வின் கொள்கை. இப்போது பூமியிலுள்ள பசிபிக் சமுத்திரமுள்ள இடத்திலிருந்து, ஒருபகுதி பிய்த்துக்கொண்டு சென்று சந்திரனாயிற்று. இவ்வாறு ஆனது ஆறுகோடி ஆண்டுகளுக்கு முன்னதாக இருக்கலாம் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர். இவ்விதம் சந்திரனின் தோற்றத்தைப்பற்றி பல கொள்கைகள் இன்னும் இருந்து வருகின்றன மேலும் பூமியிலிருந்து சந்திரன் பிறந்ததா வானவெளியிலேயே இருந்து பூமியின் கவர்ச்சிக்கு உட்பட்டதா அல்லது பூமியும் சந்திரனும் ஒரேகாலத்தில் தோன்றினவா என்பன போன்ற பல சர்ச்சைகள் உறுதிப்படுத்தப்படாமலே உள்ளன.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

I had good Darsan. I am inspired by everything in the temple. The temple is well kept. I want every temple should be like this temple in cleanliness and in the elegant atmosphere. I wish to come to the temple again and again.

(Sd.) x x x

23—8—68. District Munsif,

Sirkali.

Sri Arunajateswarasamy Devasthanam, Thiruppanandal.

I visited the Temple this evening and went round the 'Sannathis'. The Temple is being maintained excellantly well and is served, by a courteous staff who spared no pains to explain the history and importance of the Temple. I am sure the temple will continue to serve as mighty consolation and solace to many a pious mind who seek to visit the Temple and worship Him.

27—8—1968 (Sd.) V. L. Parthasarathi,

D. S. P. C. B CID. Madras.

Cleanliness is next to Godliness. This is established actually in this temple which is spotlessly neat. I am glad that I too had the opportunity to worship the Lord.

(Sd.) Ramprasad Rao,

2—9—68 Judge,

Madras High Court.

செய்திகள்

தருமையாதீனம் ஆவணிமூல விழா

ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா

தருமையாதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய செந்தமிழ்ச் சொக்கேசனுக்கு நடைபெறும் ஆவணிமூலத் திருநாள் 1—9—68 ஞாயிறு அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருநாளை யொட்டி 30—8—68 முதல் 1—9—68 முடிய மூன்று நாட்கள் இவ்விழா கொண்டாடப்பெற்றது. மூன்று நாட்களிலும் திருவிளையாடற் புராண விரிவியல் சொற்பொழிவு நடைபெற்றது.

30—8—68 வெள்ளி மாலை 3 மணிக்கு விழா தொடங்கிற்று. வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்தார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான் திருமதி ப நீலா தடாதகை திருமணம் பற்றியும், வித்துவான் திரு வி. சபேசன் உக்கிரகுமாரர் திருவிளையாடல் பற்றியும் உரை நிகழ்த்தினர்கள் ஆதீன உயர்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

31—9—68 சனிக்கிழமை பேராசிரியர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் கால்மாறியாடிய காட்சிபற்றியும், கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான் திரு. சா. குருசாமி தேசிகர் திருமுகம் கொடுத்தது பற்றியும் பேசினர்கள் ஆதீனத் தொடக்கப் பள்ளியின் சிறுவர் சிறுமியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1—9—68 ஞாயிறு ஆவணி மூலத்திருநாள். காலை 9 மணியளவில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. விழாமலராக, 'பொன்வண்ணத் தந்தாதி' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. நண்பகல் மாகேசுர பூசை நிகழ்ந்தது. மாலை பட்டமளிப்பு விழாவும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் 1950ஆ் தொடங்கி ஆவணி மூல விழாவில் தக்க புலவர் ஒருவர்க்குச் சிறப்புப்பட்டமளித்துப்

பொற்பதக்கம் வழங்கிப் பொன்னுடை போர்த்தி ஆசி வழங்கி வருதல்போல, இவ்வாண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத் துறைப் பேராசிரியர் டாக்டர் திரு வ. ஆ. தேவசேனாபதி அவர்களுக்கு வழங்கத் திருவுளம் கொண்டார்கள்.

மாலை 7 மணிக்கு விழா தொடங்கிற்று. இறை வணக்கத் திற்குப்பின் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் ஆசியருளி உரை நிகழ்த்தியருளினார்கள். திரு வ. ஆ. தேவசேனாபதி அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி 'சித்தாந்த வித்தகர்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி ஆசி அருளினார்கள்.

கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகள் படிக்கப்பெற்றன. ஆண்டுத்தேர்வில் பரிசுபெற்ற மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பரிசுகள் வழங்கியருளினார்கள். சித்தாந்த வித்தகர், டாக்டர், திரு. வ. ஆ. தேவசேனாபதி M. A., Ph. D., அவர்கள் நன்றி தெரிவித்து நிகழ்த்திய விரிவுரைச் சுருக்கம் :-

சைவசித்தாந்தம் தொன்மையான மெய்பொருள் நெறி. இதன் உண்மை சிறப்புக்களை உள்ளவாறுரைத்தல் இன்றியமையாதது. இதன் நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை அளித்தல்வேண்டும். இதன் பழமையை நீளம் என்று கூறலாம். மற்ற மெய்ப்பொருள் நெறிகளை ஒப்பிட்டு இதன் சிறப்புக் காண்டலை அகலம் எனலாம். இதன் சாத்திர தோத்திரங்களில் காணப்படும் உயர்ந்த கருத்துக்களை இதன் உயரம் என்றுரைக்கலாம்.

மாணவர்கள் சைவசித்தாந்தச் சிறப்பினை உணர்வதோடு செந்தமிழில் பிழையின்றி எழுதவும். பிழையின்றி பேசவும் பழகுதல் வேண்டும். ஒருமை, பன்மை முதலிய வழுக்கள் வராத வகையில் இருத்தல் வேண்டும்.

சைவத்தின் சமரசம் உலகறிந்தது. சைவத்தோடு பல்லாண்டுகள் தொடர்புகொண்டுவரும் எனக்கு அருள்பாலித்துப் பட்டம் வழங்கியருளிய ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் என்றும் உரியன.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மணசுமந்த மாண்பு என்ற தலைப்பில் உரை நிகழ்த்தி நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத் தொடக்க விழா

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் மாணவர் கழகத் தொடக்கவிழா 2—9—68 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது. சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையேற்று மாணவர் கழகத்தைத் தொடங்கிவைத்தார்கள். இப் பல்கலைக் கல்லூரியின் பழைய மாணவர் பட்டிமன்றமணி புலவர் திரு கீரன் அவர்கள் 2—9—68 தொடங்கி மூன்று நாட்கள் கம்பராமாயண விரிவியற் சொற்பொழிவு நிகழ்த்தினர். 'கருமுகிற் கொழுந்தின் சோதி', 'சிறியன சிந்தியாதான்', 'உயிர் கொடுத்துப் பழிகொண்டான்' என்ற தலைப்புக்களில் விரிவுரை நிகழ்ந்தது.

பல்கலைக் கல்லூரியின் பொறுப்பு முதல்வர், வித்துவான். திரு. சா குருசாமி தேசிகர், பேராசிரியை வித்துவான். திருமதி. ப நீலா, பேராசிரியர் வித்துவான். திரு. வி. சபேசன் ஆகியோர் ஒவ்வொருநாளும் வரவேற்புரை நிகழ்த்தினர். பேராசிரியர் வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் பாராட்டுரை கூறினர். மாணவர் கழகச் செயலர் தே. நடராசன் நன்றியுரை கூறினர்.

மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத்தில்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பிரதிஷ்டை

திருக்கயிலையில் ஸ்ரீகண்ட பரசிவம் நந்திதேவர்க்கு உபதேசித்தருளிய ஞானோபதேசத்தை. தருமையாதீனத்தின் வழியே உலகம் அடைதற்பொருட்டு இவ்வாதீனத்தைத் தோற்றுவித்தவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்க்கு செந்தமிழ்ச் சொக்கன் கண்ணுக்கினிய பொருளாய் அவர் தம் கையகத்தெழுந்தருளி அருள் பாலித்த இடம் மதுரை. இம் மதுரைத் திருக்கோயிலில் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் திருவுருவத்தை எழுந்தருளச் செய்யவேண்டுமென்பது சைவப் பெருமக்கள் பலரின் பெருவிருப்பாயிருந்தது. அண்மையில் இங்கு நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழாவின் போது ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியின் இரண்டாம் கோபுரத் திருவறையில் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் திருவுருவம் ஓவியமாக எழுதப்பெற்று வழிபாட்டிற்குரியதாய்விளங்கிற்று. இவ்விடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தங்கள் ஆதிபரமாசாரியராகிய இவரது திருவுருவச் சிலாமூர்த்தத்தை எழுந்தருளுவிக்கத்

திருவுளங்கொண்டார்கள். அவ்வண்ணமே எழுந்தருளுவிக்கப் பெற்ற சிலாமூர்த்திக்கு நிகழும் கீலக ஆண்டு ஆவணித்திங்கள் 6 ஆம் நாள் (21—8—68) புதன்கிழமை காலை 8 மணி அளவில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து சிறப்பித்தார்கள் சிவஸ்ரீ. ம. க சுந்தரேசபட்டர் அவர்கள் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தினார்கள். உச்சிக்காலத்தில் ஸ்ரீ சொக்கநாத சுவாமிக்கும், ஸ்ரீ மீனாட்சியம்மைக்கும் மகந்நியாச பூர்வமான ஏகாதச ருத்ராபிஷேகம், அர்ச்சனை முதலியவைகள் நடைபெற்றன.

மாலையில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தருமையாதீனம் ஒடுக்கம். வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் ஆதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், சிவாகம வித்துவான். சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும் ஆதீனம் காரியஸ்தர்களும் நிகழ்ச்சிகளை இனிதே நடத்தினார்கள்.

அன்பர்கள் பலர் எல்லாவற்றிலும் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள்.

விசேஷ நாட்கள்

10—9—68 முதல் 10—10—68 முடிய

13—9—68	வேளூர்க் கிருத்திகை
20—9—68	பிரதோஷம்
21—9—68	அருணந்தி சிவாசாரியார் திருநக்ஷத்திரம்
22—9—68	சூரிய கிரஹணம்
23—9—68	நவராத்திரியில் சதசண்டி ஹோம ஆரம்பம்
30—9—68	சதசண்டி ஹவன பூர்த்தி
,,	ஏனாதி நாயனார் திருநக்ஷத்திரம்
1—10—68	விஜயதசமி, சதசண்டி கலசாபிஷேகம்
3—10—68	பிரதோஷம்
,,	நரசிங்கமுனையரைய நாயனார் திருநக்ஷத்திரம்
5—10—68	நடராஜா அபிஷேகம்
6—10—68	சந்திர கிரஹணம்
7—10—68	உருத்திரபசுபதி நாயனார் திருநக்ஷத்திரம்
10—10—68	வேளூர்க் கிருத்திகை

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

கலிய நாயனார், கோட்புலி நாயனார்

குருபூஜைவிழா

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 4—8—68 மாலை ஸ்ரீ கலிய நாயனார், ஸ்ரீ கோட்புலி நாயனார் குருபூஜைவிழாக் கொண்டாடப்பெற்றது. திருமுறை வகுப்பு மாணவர்கள் திருமுறைகள் ஓதியபின்னர் ஸ்ரீ கயிலாயநாதருக்குப் போற்றித் திருத்தாண்டகம் சொல்லி அர்ச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தப்பட்டது. வழிபாட்டின் பின்னர்த் தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பெரிய புராணத்தில் உள்ள இரு நாயன்மார்களின் வரலாற்றுப் பகுதியைப் படித்து விளக்கம் சொன்னார்கள். எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அத்தொழில் மூலமாகவே தொண்டும்செய்து இறைவனை அடையலாம் என்பதற்கு நாயன்மார்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றார்கள். கலிய நாயனார் வாணியர் - செக்கார் குலம். ஆதலால் அத்தொழிலுக்கு ஏற்ப சுவாமிக்கு விளக்கு இட்டு வீடு பெற்றார். கோட்புலி நாயனார் நிலச்சுவான்தார். பல கோயில்களுக்கு அமுதுபடிக்கு நெல்லளித்துச் சிவப்பேறு பெற்றார். மக்கள் ஒவ்வொருவரும் அவரவர் தொழிலிலேயே தொண்டு செய்து சிறப்பெய்த வழி காட்டுவது நாயன்மார்களின் நல்வாழ்வு என்று அறிவித்தார்கள். மாயூரம் கயிலைக் கந்தசாமிச் செட்டியார் உபயமாக வழிபாடு நிகழ்ந்தது. கலிய நாயனார் விளக்கிட்டவராதலின் கயிலாய நாதர் வழிபாட்டுக்கூடம் திருவிளக்கொளியால் சிவம் பெருக்கிற்று. கோட்புலியார் இறைவனுக்கு அமுதுபடி அளித்தவர். ஆதலால் சித்திரான்னம் நிவேதனம் செய்து விழாவில் பங்கு கொண்டவர்கட்கு வழங்கப்பட்டன.

பட்டினத்தார் குருபூஜைவிழா

7—8—68 மாலை பட்டினத்தார் குருபூஜைவிழா நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ கயிலாயநாதருக்குப் போற்றித் திருத்தாண்டக அர்ச்சனை விசேட நிவேதனத்துடன் நடைபெற்றது. வழிபாட்டின்பின்னர். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பட்டினத்தாரின் வரலாறுபற்றியும் அவர் செய்த உபதேசங்கள் பற்றியும் பேசுகையில் பொன்னால் நாம்

பயன் அடைகிறோம். நம்மால் பொன்னுக்குப் பயன் இல்லை. அதுபோல் இறைவனால் நாம் பயன் அடைகிறோம். நம்மால் அவனுக்கு ஒருபயனும் இல்லை. ஆதலால் வழிபாடு செய்வ தெல்லாம் நாம் உயர்வதன்றோ என்பதை மக்கள் உணர வேண்டும். இது நான் சொல்வதல்ல, பட்டினத்தார் சொல்கிறார் என்றார்கள். அப்பாடல்

பொன்னால் பிரயோசனம் பொன்படைத் தாற்குண்டு
பொன்படைத்தோன்
தன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத்
தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு
உனைப்பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி
யீசுரனே.

வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

நிலயத்தில் வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா 21—7—68 ஞாயிறு மாலை 7 மணிக்கு நிலயத் தில் திரு. வி. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திருமுறைவகுப்பு மாண விகள் வேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள். உறுப்பினர்கட்கும் பக்தர்கட்கும் சந்தனக்குழம்பும் அர்ச்சனைப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

112வது மாத வழிபாடு

சென்னை, தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலயத்தின் 112வது மாத வழிபாடும், சமயப் பிரசார மும் 28—7—68 ஞாயிறு மாலை பல்லாவரத்தைச் சேர்ந்த திரி சூலம் ஸ்ரீ திரிசூலநாதர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றன. நிலைய வழிபாட்டுக் குழுவினர் சார்பாக சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகட்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. குழுவினர் சிவபுராணம் ஓதி முறையாக வழிபாடாற்றினர். பிறகு தவத் திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது.

திரு கீ. இராமலிங்க முதலியார், திரு டி. கே. சுப்பிரமணிய பிள்ளை, திரு கே. கமலக்கண்ணன், திரு பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார். திரு ந. ரா. முருகவேள், திரு இரா. செல்வக்கணபதி

திருமதி மீனுட்சிசுந்தர சிவை ஆகியோர் கடவுளர் படங்களை அரசாங்க அலுவலகங்களிலிருந்து அகற்ற வேண்டாம்; அந்நிய மதத்தவரான விக்டோரியா மகாராணியாரே மதசம்பந்தமாகத் தலையிடுவதில்லையென்று வாக்குறுதி கொடுத்து அதன்படி நடந்திருக்கும்போது, சுதந்திர வாழ்வில் பலர் மனம் புண்படும்படியாக நமது அரசினர் நடந்து கொண்டது வருந்தத் தக்கதென்றும் இனியாகிலும் அந்த உத்தரவை அமுல்படுத்தாமல் இருப்பார்களானுல் மக்கள் மனத்தில் ஆட்சியாளர்கள் இடம்பெற முடியும் என்றும், கூறி அமல்படுத்தும் செயல்களைக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள்.

சுவாமிகள் தமது தலைமை உரையில், தாய் அறியாச் சூலையும் வளர்க்கும் தனித்துணையாக இருப்பவன் இறைவன். அவனன்றி ஓரணுவும் அசையாது. நமது உடலில் உள்ள எலும்பு, தோல், நரம்பு முதலிய எல்லா உறுப்புக்களும் வளர் வதற்குக் கோடிக்கணக்கான இரத்த அணுக்கள் இரவு பகல் ஓயாமல் நமக்குச் சிரமம் கொடுக்காமல் வேலைசெய்து நம்மை வளர்க்கின்றன. அவ்விரத்த அணுக்கள் இயங்கும் முறையைச் சிறிது சிந்தித்துப்பார்த்தால் எத்தகையவர்களுக்கும் கடவுள் நம்பிக்கை இல்லாமல் போகாது. கடவுளர் படங்களை அகற்ற வேண்டும் என்று உத்தரவு போட்டதன் காரணமாகக் கடவுள் பக்தி அதிகரிக்குமே தவிர குறையாது. பிள்ளையார் உடைப்புத் தொடங்கியதால் பிள்ளையார்கோயில்கள் வளர்ச்சி அடைந்தன. பக்தி பெருகிற்று. அதுபோல் தெய்வ பக்தி மக்களிடையே பரவு வதற்கு அரசாங்கம் எதிர்மறைமுகத்தால் உதவுகிறது என்றே கருதுகிறேன் என்று கூறினுர்கள். திரு ஒய். குப்புசாமி ஐயர் அவர்களும், திருசூலநாதர் பக்தஜன சங்கத்தாரும் குழுவினரை வரவேற்று, வழிபாட்டையும் சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள். சென்னை இந்து அறநிலைய உதவி ஆணையர் திரு ஆர். தண்டபாணி அவர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டார்கள்.

சுந்தரர் குருபூசைவிழா

சென்னை, தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 1—8—68 மாலை சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா சிறப்பாக நடைபெற்றது. சுந்தரர் அருளிய தேவாரத்தைத் திருமுறை வகுப்பு மாணவிகள் ஓதச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. திரு கீ. இராமலிங்க முதலியார் அவர்கள்

விழாவிற்குத் தலைமைவகித்தார்கள். 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் "நயத்திற்குச் சுந்தரர்" என்பது பற்றிப் பேசினூர்கள். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறும்போது சுந்தரர் சைவர்களின் குலதெய்வம் என்ரூர்கள். ஏனெனில் சிவநெறியில் நின்று வாழ்ந்துகாட்டிய நாயன்மார் அறுபத்து மூவரை நமக்கு அறிமுகம் செய்துவைத்தவர் சுந்தர். இதற்காகவே அவர் அவதரித்தவர். தமக்கு முன்னர் தோன்றிய பெரிய ஆசாரியர்களிடம் பெருமதிப்பு வைத்து நடக்கவேண்டும் என்பதை நடந்துகாட்டிய பேராசான். குற்றம் செய்வது உயிர்களின் குணம்; உயிர்களின் குற்றங்களை மறப்பது இறைவன் குணம். இதைச் சுந்தரர் வரலாற்ருலும் நன்கு உணரலாம் என்று குறிப்பிட்டார்கள்.

மறைஞானசம்பந்தர் குருபூஜை

சைவ சந்தான குரவருள் மூன்ருவது ஆசாரியரான ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை 26—8—68 திங்கட்கிழமை மாலை சென்னை தியாகராயநகர் தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் சிறப்பாக கொண்டாடப்பெற்றது. போற்றித் திருத்தாண்டகம் சொல்லி ஸ்ரீ கயிலாயநாதருக்கு திருமுறை அர்ச்சனை நடத்தி வழிபாடு செய்யப்பட்டது. பிறகு தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேசும்போது சமயாசாரியர் மூவரில் முதல்வர் திருஞானசம்பந்தர், இரண்டாமவர் மறைஞானசம்பந்தர், மூன்ருமவர் தருமை ஆதீன முதல்வர் குருஞானசம்பந்தர், மறையவல்ல காரணத்தால் மறைஞானசம்பந்தர் எனப்பெயர்பெற்ற மறைஞானசம்பந்தர் பேரனுபூதிமான். இவரனுபூதி முழுவதும் உமாபதி சிவம் வாயிலாக எட்டு நூல்களாகச் சித்தாந்த அஷ்டகமாக வெளிவந்தன. ஆசாரிய பக்தி ஆண்டவன் திருவருளை நமக்குக் கூட்டி வைக்கும் என்று குறிப்பிட்டார்.

"ஞானசம்பந்தம்"

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ 4—00

எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

(கீலகஸ்ரீ புரட்டாசிமீ 1௨ முதல் 30௨ முடிய)

(17—9—68 முதல் 16—10—68 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு, செலவு சமனாகும். அதிக உழைப்பின்பேரில் லாபம் கிடைக்கும். குடும்பம் விருத்தியாகும். விசேஷ புண்ணிய பலனைக் கொடுக்கும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். சிநேகிதர்கள் மூலமாய் நன்மை ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். நூதன உத்தியோகத்தின் பொருட்டு இடம் மாறுதல் ஏற்படும். தீராத விவகாரம் தீரும். சஸ்யதான்ய விருத்திகள் ஏற்படும். விவசாயம் மூலம் லாபம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வெகுகாலமாக இருந்த வியாதி நீங்கும். இடம் மாறுதல் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். ஜீவனம் ஓங்கும். தெய்வபலம் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். நூதன முறையால் தொழில் உயர்வும், விவசாய விருத்தியும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிரய விக்ரயங்களும் ஏற்படும். ஒரு புத்திரனால் விசேஷமான கீர்த்தி ஏற்படும். சுபசோபனாதிகள்

மூலம் அடிக்கடி விரயங்கள் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவு சமமாகும். தொழில் மூலமாய் அதிக லாபம் உண்டாகும். குடும்பத் தொல்லைகளால் மனம் கவலை அடையும். தெய்வபலம் முன்னின்று காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தரும் விசேஷ தர்மமூலமாய் அதிக விரயம் ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். சஸ்ய தான்ய விருத்தியினால் விசேஷ லாபத்தைத் தரும். உலகில் நிரந்தரமான கீர்த்தியைத் தரும். தெய்வ சாந்நித்யம் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தரும். எதிர்பாராத லாபங்கள் தானாக வந்து சேரும். சகல காரியங் களும் வெற்றி அடையும். உலகத்தில் பிரசித்தியும், தெய்வத் தன்மையும் பிரகாசிக்கும். கிரக தோஷங்கள் நிவர்த்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். தன தான்ய விருத்தி ஏற்படும். தொழில் விருத்தியாகும. வம்சம் விருத்தியாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும் மகா யாக பலன் கிடைக்கும். கிரகதோஷம் நீங்கும். ஆரோக்யமும், சுகமும் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். புத்திர பௌத்திராபிவிருத்தியும், தனதான்ய விருத்தியும், ஜீவன லாப மும் கிடைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பம் ஓங்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவு சமமாகும் நூதன உத்தியோக முறையால் விசேஷ லாபம் உண்டுபண்ணும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். ஆரோக்யம் ஏற்படும். தீராத வியாதி தீரும். குடும்ப சுகம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சஞ்சார மூலம் தொழில் விருத்தியாகும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சுபங் களால் செலவுகள் ஏற்படும். நஷ்டமான பொருள் வந்துசேரும். ஆரோக்யம் தரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். ராஜாங்க சிநேகம் ஏற்படும். புத்திராதிகளால் குடும்பம் ஓங்கும். ஜீவன விருத்தி ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். கட்டிட வேலைகளும், தானதர்மங்களும் செய்யும்படி இருக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு நீடிக்கும். மனம் சாந்தி அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

1. எதிர்கால கிரகநிலை மூலமாய், கீலக வருஷம் புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய பல விமர்சனம், ஷ்டி புரட்டாசிமீ 6உ ஞாயிற்றுக்கிழமை (22-9-68) உத்திர நக்ஷத்திரத்தில் கிரஸ்தாஸ்தமனமாக சூரிய கிரஹகணம் பானுவாரத்தில் மாலை 5 மணி 21 நிமிஷத்துக்கு ஆரம்பமாகி இரவு 6 47க்கு மோக்ஷமடைகிறது. கேது கிரஸ்தம் (சூடாமணி கிரஹணமாகும்) ஷ்டி தினத்துக்கு 15-வது தினமே 20உ ஞாயிற்றுக்கிழமையே, ரேவதி நக்ஷத்திரத்தில் கிரஸ்தோதயமாக மாலை 3-25க்கு சந்திர கிரகணம் ராகு கிரஸ்தமாக ஆரம்பித்து, இரவு 6-59க்கு மோக்ஷமடையும். இதற்கு, பக்ஷாவசாந கிரஹணமென்று பெயர்.

2. ஷ்டி பக்ஷத்துக்குள்ளேயே சரத்கால நவராத்திரி 7உ திங்கட்கிழமை காலை கடஸ்தாபனம் ஆரம்பித்து, மகாநவமி எட்டு தினத்தில் 14உ திங்கட்கிழமையே மகாபூர்ணாகுதி மகா நவமி வருகிறது.

3. ஷ புரட்டாசிமீ 17உ வியாழக்கிழமையே தனது வாரத்தில், குரு கன்னியா ராசியில் சூரியன் புதன், கேது இவர்களோடு சேர்ந்து சனிக்கும், ராகுவுக்கும் 7-ல் சமசப்தகமாக சஞ்சாரம் ஏற்படுகிறது.

மேல்கண்ட காரணங்களால் உலகமக்களுக்கு எச்சரிக்கை செய்வதைப்போல் ஆகும். அதாவது எந்தக் காலத்தில் கடவுளால் அளிக்கப்பட்ட வேதாகம ஜோதிஷ மந்திர சாஸ்திராதிகளில் நாஸ்திகம் ஏற்பட்டு, கடவுள் சட்டத்தை ஜனங்கள் நிர்வாஹஸ்தாள் மீறுகிறார்களோ அந்த சமயங்களில் கிரகங்களின் சஞ்சார மூலமாயும் திவ்யபௌம அந்தரிக்ஷாதி உத்பாதங்கள் மூலமாயும், இயற்கைக் கோளாறுகள் மூலமாயும், இவைகள் தேவகோபம் என்பதைத் தெரியப்படுத்தி, தன்னால் கொடுக்கப்பட்ட புத்தி பலத்தால் பிரஜைகள் தாங்கள் செய்து வரும பிசகுகளை உணர்ந்துகொண்டு நாஸ்தீகத்தைத்தொலைத்து நமது பெரியோர்கள் சென்ற வழியே சென்றுகொண்டு தேவ கோபம் தணிய சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட லக்ஷ கோடி அர்ச்சனைகள், மகாயஞ்ஞங்கள், மகாதானாதிகள் எல்லாவற்றையும், பிரதான க்ஷேத்திரங்களில் நடத்திக்கொண்டும், பூரம், உத்திரம், ஹஸ்தம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, நக்ஷத்திரத்தில் ஜனித்தவர்களும் கிரகண சாந்தியும் செய்துகொள்ள சுபமுண்டாகும். உலக சுபிக்ஷத்துக்கும் விசேஷ உபகாரமாகும். கடவுள் காப்பார்.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம். இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யவும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது. ஆண்டுச் சந்தா ரூ. 3—00.

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,

உயர்திருவாளர். T. M. குமரகுருபரன்பிள்ளை B.A., B.L. அவர்கள்

குமரகுருபரன் ஆபிஸ். ஸ்ரீவைகுண்டம்.